Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை–25 | 10–12–2005 | சனிக்கிழமை | ஓசை–296



தைப்பொங்கல் வரை 15% வீதம்
விசேட சேவைக் கழிவுடன்
உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (ர் 13511) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## இராணுவத்தின் தாக்குதல்களும் அச்சுறுத்தல்களும் தொடரின்

# மக்களின் கொந்தளிப்பை எவருமே கட்டுப்படுத்த முடியாத நிலை தோன்றும்

## நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கருக்கு சு.ப.தமிழ்ச்செல்வன் சூழ்நிலை குறித்து விபரிப்பு

(கிளிநொச்சி)

***பொது மக்கள் மீது இராணுவம் தாக்குதல்களையும், குழப்பங்களையும், அச்சுறுத்தல்களையும் தீவிரமாக்கி வருகின்றது. இந்தப் போக்குத் தொடருமானால் மக்களின் கொந்தளிப்பை எவருமே கட்டுப்படுத்த முடியாத்நிலை தோன்றும் என எச்சரித்துள்ள அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள், யுத்த நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதை விரைவுபடுத்தி நிலைமையைச் சீர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நோர்வே தூதுவரிடம் கேட்டுக்கொண்டார்.***

சு.ப.தமிழ்ச்செல்வனை சிறிலங்காவுக்கான நோர்வே அரசின் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் நேற்று வெள்ளிக் கிழமை கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் முற்பகல் 9.30மணியளவில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்புக்குப் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு சு.ப. தமிழ்ச்செல்வன் அளித்த பேட்டியின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு இப்பேட்டியின் விபரம் வருமாறு.

கேள்வி: இன்றைய சந்திப்பு தொடர்பாக?

பதில்: இன்றைய சந்திப்பானது வழமையாக நோர்வே தூதுக் குழுவை சந்திக்கின்ற சந்திப்பாக இருப்பினும் சிறிலங்காவில் புதிய சனாதிபதி பதவியேற்ற நிலையில் நோர்வே அனுசரணையாளர்களைச் சந்தித்திருக்கிறோம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



## மகிந்தவின் கொடும்பாவி எரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டு மாணவர்களால் சிறிலங்கா சனாதிபதி மற்றும் பேரினவாத அடக்குமுறையாளர்கள் என்பவற்றைச் சித்தரிக்கும் கொடும்பாவி ஒன்று நேற்று யாழ்நகரில் தீ மூட்டி எரிக்கப்பட்டது.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இக்கொடும்பாவி எரிப்பில் மாணவர்களுடன் பெற்றோர்களும் இணைந்து கொண்டு பேரினவாதத்திற்கு எதிரான தம் உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச ம.உ. தினத்தைச் சிறப்பிக்க வடக்கு–கிழக்கு ம.உ.செயலகம் ஏற்பாடு

சர்வதேச மனித உரிமைகள் தினத்தைச் சிறப்பிக்க வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் இன்று ஏற்பாடுகளை செய்துள்ளது.

கிளிநொச்சியில் இயங்கி வரும் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் இன்று சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு முற்பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்வில் வடக்குக் கிழக்கு மனித உரிமை செயலகத்தின் மாவட்டப் பிரதிநிதிகள்மற்றும் மனித உரிமைகள் சார்ந்த பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(12.ஆம்பக்கம் பார்க்க)

### தமிழர் தாயகத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள்

## ஒற்றுமையுடனும், நிம்மதியுடனும் வாழ தேசியத்தலைவர் தீவிர நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

தமிழ், முஸ்லிம் மக்கள் தாயகத்தில் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் கௌரவமாகவும் ஒருமைப்பாட்டுடனும் வாழ்கின்ற சூழலை உருவாக்கு, வதுங் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

எனவே தமிழ், முஸ்லிம் மக்கள் எந்தப் பதற்றமும் அடையாமலும், முரண்பாடுகள், குரோத உணர்வும் வளராமலும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் நல்லுறவை கட்டியெழுப்ப அனைத்துத் தரப்பும் அர்ப்பணிப்புடன் பாடுபட வேண்டும். இதனை எமது தலைமைப்பீடத்தின் சார்பாக நான்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சூறாவளி எச்சரிக்கை!

யாழ்ப்பாணத்தை நோக்கி நகரும் வனூஸ் சூறாவளி நேற்று நள்ளிரவுக்கும் இன்று காலைக்கும் இடையில் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கடந்துசெல்லக்கூடும். யாழ்ப்பாணத்துக்கூடாக, மன்னாரில் இருந்து திருகோணமலை வரையான கரையோர கடற்பிரதேசங்களில் கடல் மிகவும் கொந்தளிப்பாக இருப்பதுடன் பலத்த காற்றுடன் கூடிய மழை அல்லது இடியுடன் கூடிய மழை இடையிடையே பெய்யுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் வடக்கு,வடமேற்கு, கிழக்கு, மற்றும் வடமத்திய மாகாணங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழை அல்லது இடியுடன் கூடிய மழைபெய்யுமெனவும், மத்திய, மேல், சப்ரகமுவ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் வன்செயல்களைக் கண்டித்து மட்டு,திருமலையில் கதவடைப்புப்போராட்டம்

சிறிலங்காப் படையினரின் வன்செயல்கள்மற்றும் கொலைகளுக்கு எதிராக திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நேற்று மக்களால் பூரண கதவடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

மூதூரில் அண்மையில் நடைபெற்ற கொலைகளையும் மற்றும் படையினரின் வன்செயல்களையும் கண்டித்து நேற்று திருகோணமலை மாவட்டத்தில் கதவடைப்பு மற்றும் பணிப்புறக் கணிப்பின் காரணமாக மாவட்டத்தின் இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துக்கள் அனைத்தும் முற்றாக தடைப்பட்டுள்ள அதேவேளை, அரச, அரச

(12 ஆம் பக்கம் பார்க்க)

### படையினர் அராஜகத்தைக் கண்டித்து

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் வகுப்புகளை நேற்றுப் பகிஷ்கரித்தனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று தமக்கான விரிவுரைகள் மற்றும் கல்விச் செயற்பாடுகள் என்பவற்றைப் பகிஷ்கரித்து இராணுவத்தின் அராஜகங்களிற்கு எதிராகப் போராட்டத்தை நடத்தினர்.

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தைச் சூழ இராணுவத்தைக்குவித்து போக்கு வரத்துக்களைத் தடுத்து இயல்புநிலைக்குப் பங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளமைக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையிலும் பாடசாலை மாணவர்கள் தமக்கு எதிரான இராணுவத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் இராணுவக் கெடுபிடிகள் என்பவற்றிற்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஆக்கிரமிப்பை அகற்ற ஐந்தாவது நாளாக மாணவர் போராட்டம்

### பல பகுதிகளில் மாணவர்- படையினர் மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி வளாகத்துள் இராணுவம் மேற்கொண்டு வரும் மண் அணைகள் மற்றும் பதுங்குகுழிகள் அமைப்புப் பணிகளுக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் வகையில் அக்கல்லூரி மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் பகிஷ்கரிப்புப் போராட்டம் மற்றும் இராணுவத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் என்பன நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்து இடம் பெற்றது.

ஹாட்லிக்கல்லூரி மாணவர்களது இந்தப்போராட்டத்துக்கு ஆதரவாகவும் யாழ். குடாநாட்டு மாணவர்களினதும் இயல்பான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

தர்மகுலசிங்கம் றொய்ஸ்ரன் என்பவரது தேசிய அடையாள அட்டையுடன் பேர்ஸ் ஒன்று முகமாலையில் இருந்து கிளிநொச்சி வந்த பேருந்தில் 1.12.2005அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக் குமாறு வேண்டப் படுகின்றார்கள்

(7079)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

இலங்கை கணனிகள் சங்கத்தினால் நடாத்தப்படும் பரீட்சை

**Srilankan Computer Driving Liecence**

**வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

**தொடர்புகட்கு:**

**வின்நெற் கணனி பயிற்சி நிலையம்**

**டிப்போ வீதி, கிளிநொச்சி**

(சி.13074)

# தமிழீழ சுகாதார சேவையினரின் சுகாதார சேவைகள்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ சுகாதார சேவையினரால் பின் தங்கிய, சுகாதார வசதிகள் குறைந்த கிராமங்களுக்குச் சென்று மழைக்காலதொற்று நோயிலிருந்து பாதுகாத்தல் தொடர்பான சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும், சிகிச்சைகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

அதில் விடத்தல்தீவு கிராமத்தில் இன்றும், நாளை வெள்ளாங்குளம் கிராமத்திலும் சுகாதார கருத்தரங்குகளும் பற்சிகிச்சைப் பிரிவின் பற்சிகிச் சையும் மற்றும் வாய்ப்புற்று நோய், கண் பரிசோதனை அத்துடன் வருமுன் காப்பு கருத்தரங்குகளும், விழிப்புணர்வும் நடைபெறவுள்ளதால் அப்பிரதேச வாழ் மக்கள் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக் கொள்கிறார்கள் இச் சேவையின் அனுசர ணையினை நலவாழ்வு அபிவிருத்தி நிறு வனம் வழங்குகின்றது(கு,தீ)

# மோட்டார் ஊர்தி பதிவு பகுதியினரின் நடமாடும் சேவை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மோட்டார் ஊர்திப்பதிவுப் பகுதியினரால் நடமாடும் சேவைகள் மூலம் தமிழீழ பதிவு மேற்கொள்ளாத ஊர்திகளுக்கு நடமாடும் சேவை மூலம் பதிவுகள் மேற்கொள்ளப் பெற்று 2006 ஆம் ஆண்டிற்கான வரிஅட்டையும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் 11 ஆம் திகதியன்று விசுவமடு விலும் 12 ஆம்திகதியன்று பளையிலும்,13 ஆம் திகதியன்று மருதங் கேணியிலும், [illegible] ஆம் திகதியன்று பூநகரியிலுமுள்ள போக்குவரத்துக்கண்காணிப்பு பிரிவு பிரதேசச் செயலகங்களில் மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதென போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.(சோ)

# அறிவித்தல்

கிளிநொச்சி நகரத்திற்குள் கட்டாக்காலி கால் நடைகளைப் பிடிப்பதற்கு கீழ்க் காண்பவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்

| | | |
|---|---|---|
| திரு. சின்னராசா, | சுவேந்திரகுமார் | மருதநகர் |
| திரு. சிவசுப்பிரமணியம் | வேணுராசா | மருதநகர் |
| திரு. ஆண்டி | தியாகராசா | மருதநகர் |
| திரு. சிதம்பரப்பிள்ளை | தயானந்தன் | மருதநகர் |
| திரு. தர்மலிங்கம் | சுரேஷ்குமார் | மருதநகர் |
| திரு. முத்துலிங்கம் | துஷ்யந்தன் | மருதநகர் |

சிறப்பு ஆணையாளர்,

(சி.13491) கரைச்சிப் பிரதேச சபை.

# பணிநிலை வேண்டுகை

எமது ஆளுகையிலுள்ள பணிநிலை வெற்றிடத் திற்கு இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன. வேண்டுகையாளர் தன்வரலாறு அடங்கிய விளக்கங்களுடன், கல்விச்சான்று மற்றும் ஆவணங்களையும் 2005.12.14 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத்தேர்விற்கு வருகை தரும்போது கொண்டு வருமாறு வேண்டுகிறோம்

**பணிநிலை**

கணக்குப்பதிவாளர்

**தகைமைகள்**

01. க.பொ.த உயர்தரத்தில் கணக்கியல் உட்பட மூன்று (03) பாடங்களில் தேறியிருத்தல் வேண்டும்
02. அகவை:- 18-35 வரை

நேர்முகத்தேர்வு நடைபெறும்

நாள்:- 2005.12.14

நேரம்:- காலை 9.30 மணி

இடம்:- நடுவப்பணிமனை,
மருதம் வாணிபம்,
கண்ணன் கோவில் வீதி,
திருநகர், கிளிநொச்சி.

அளுகை,
மருதம் வாணிபம் (7046)

வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (மல்லாகம்)
சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக்கடை தொகுதிகள் என்பன
01.01.2006 தொடக்கம் 31.12.2006 வரை
குத்தகைக்கு/ வாடகைக்கு விடுவதற்கான

# மீள்கேள்வி அறிவித்தல்-2006

*கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :16. 12. 2005, வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை*
*கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :19. 12. 2005 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை*
*கேள்விகள் திறக்கப்படும் திகதி :19. 12. 2005 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிவரை*

ஏனைய மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்திலும் மல்லாகம், தெல்லிப்பழை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
கேள்வி நிபந்தனைகள் யாவும் 24.11.2005 திகதிய உதயன் பத்திரிகை கேள்வி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டவாறு அமையும். **கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| 01. இறால் மடம் சந்தை | - | 550/- | 500/- | 150/- |
| 02. அளவெட்டி கருவாட்டுக் கடை, இல.06 | 125/- | - | 500/- | 150/- |
| 03. அளவெட்டி கருவாட்டுக் கடை, இல.07 | 125/- | - | 500/- | 150/- |
| 04. மல்லாகம் சந்தை கருவாட்டுக்கடை | 300/- | 525 | 500/- | 150/- |
| 05. மல்லாகம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 300/- | 1050 | 500/- | 150/- |
| 06. மல்லாகம் பொதுச்சந்தை கடைத்தொகுதிக் கடைகள் இல.06 | 300/- | 25000 | 1000/- | 150/- |
| **தெல்லிப்பழை உப அலுவலகம்** | | | | |
| 01. கூத்தன் சீமாச் சந்தை | - | 500/- | 500/- | 150/- |
| 02. கடைத்தொகுதி கடை இல.01 | 100/- | - | 500/- | 150/- |
| 03. கடைஇல.02 | 100/- | - | 500/- | 150/- |

வலிகாமம் வடக்குப் பிரதேச சபை,
(சி.13445) காங்கேசன்துறை (மல்லாகம்)

திருமதி. ஸ்ரீரஞ்சிதமலர் மாணிக்கம். செயலாளர்,
வலிகாமம் வடக்குப் பிரதேச சபை.

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை ,சுன்னாகம்
# 2006 ஆம் ஆண்டுக்கான மீள்கேள்வி அறிவித்தல்

*வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள் கருவாட்டுக்கடைகள், என்பவற்றை 2006. 01. 01 ஆம் திகதி முதல் 2006. 12. 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.* **அட்டவணை**

| இல | சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற் வரி தவிர்ந்தது) | மாத வாடகை (வற் வரி தவிர்ந்தது) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | 1000.00 | 10000.00 | 2717600.00 | - |
| 02 | உடுவில் கீளிச்சந்தை | 500.00 | 2000.00 | 78500.00 | - |
| 03 | உடுவில் ஆலடிச்சந்தை | 200.00 | 500.00 | 5000.00 | - |
| 04 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை | 750.00 | 5000.00 | 661000.00 | 250.00 |
| 05 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 3000.00 | 66500.00 | 250.00 |
| 06 | கருவாட்டுக்கடை இல.04 | 300.00 | 2000.00 | 13000.00 | 150.00 |
| 07 | கருவாட்டுக்கடை இல.05 | 300.00 | 2000.00 | 11000.00 | 150.00 |
| 08 | கோழி உரித்தல் | 300.00 | 2000.00 | 39500.00 | 150.00 |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 01 | மருதனார்மடம் பொதுச்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | 1000.00 | 10000.00 | 2489100.00 | - |
| 02 | இணுவில் பொதுச்சந்தை | 300.00 | 2000.00 | 35500.00 | - |
| 03 | மல்வம் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 127500.00 | - |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 01 | ஏழாலைச் சந்தை | 300.00 | 2000.00 | 14500.00 | - |

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2005.12.16 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி : 2005.12.16 2.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி : 2005.12.16 3.00 மணிக்கு

**குத்தகை சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்**

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
(சி.13440) 05.12.2005

திருமதி. ச. சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை

## தரையிறங்கிய விமானம் மோதி ஆறுவயதுச் சிறுவன் பலி

நேற்றைய தினம் சிக்காக்கோ விமானநிலையத்தில் ஜெட் விமான மொன்று இறங்கமுற்பட்ட சமயம் விபத்துக்குள்ளானதில் ஆறுவயதுச் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் பத்துப்பேர் காயமடைந்துள்ளார்கள்.

விமானம் மூடுபனிக்குள் சிக்கி இறங்கிய போது ஒரு பாதைக்கு அப்பால் வேலியொன்றுடன் மோதி சன நடமாட்டம் உள்ள வீதியில் சென்று



கொண்டிருந்த வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த அனர்த்தத்தில் குறைந்தது பத்துப்பேர் காயமடைந்துள்ளார்களென்று சிக்காக்கோ அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். தரையில் எட்டுப்பேர் காயமடைந்தார்கள் எனவும், மேலும் விமானத்தில் இருந்த பிரயாணிகள் இரண்டு பேர்சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்கள் என்று விமானப் போக்குவரத்துத்திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# சீனாவில் சுரங்க விபத்து 74 தொழிலாளர்கள் பலி

(பீஜிங்)

**நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட எரிவாயுசிலிண்டர் வெடிப்பில் 74 தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர். 39 பேரைக் காணவில்லை.**

சீனத்தலைநகர் பீஜிங்கில் இருந்து 164 கிலோமீற்றர் தொலைவிலுள்ள லியூகுவாந்தன் நிலக்கரிச் சுரங்கத்தில் நேற்று முன்தினம் காலை 186 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்த போது சுரங்கத்தில் திடீர் என்று எரிவாயு சிலிண்டர் வெடித்தது.

இந்த விபத்தில் 113 பேர் சுரங்கத்தில் சிக்கிக் கொண்டனர். மற்றவர்கள் இந்த விபத்தில் தப்பிவிட்டனர்.

இந்த விபத்து நடந்ததும் மீட்புக் குழுவினர் சுரங்கத்திற்குள் இறங்கி 31 பேரை காப்பாற்றி வெளியே கொண்டு வந்தனர்.51 பேர் சடலமாக மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்டவர்களில் 23 பேர் காயம் காரணமாக இறந்தனர். இதனால் இந்த விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 74 ஆக உயர்ந்தது.

மீதி 39 பேர் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை.

பத்து நாட்களுக்கு முன்பு தான் ஹெய் லோங்ஜியாங் மாநிலத்தில் உள்ள டோங்பெங் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 171 பேர் பலியானார்கள்.



*டென்மார்க் நாட்டின் கோர்சேர் கடற்கரை அருகே ஜமைக்கா நாட்டுச் சரக்குக் கப்பலும், லைபீரியா நாட்டுச் சரக்குக் கப்பலும் கடந்த புதன்கிழமை நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இந்த விபத்தில் சேதமடைந்த ஜமைக்கா நாட்டுக் கப்பல் கடலில் மூழ்கிக்கொண்டிருக்கிறது. இந்தக் கப்பலில் இருந்த 23 ஊழியர்கள் காப்பாற்றப்பட்டு விட்டனர்.*



*இந்தியப் பயணம் மேற்கொண்டுள்ள நோர்வே நாட்டுப் பிரதமர் ஜென்ஸ் ஸ்டோல் டென் பெர்க் டில்லியில் சனாதிபதி அப்துல் கலாமை நேற்று முன்தினம் சந்தித்த போது.*

## பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு 12 பேர் பலி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லை அருகேயுள்ள தெற்கு வாசீரிஸ் தானில் உள்ள ஜன்டோலா நகரில் சந்தைப் பகுதியில் குண்டு வெடித்தது.இதில் 12 பேர் பலியானார்கள்.10 பேர் காயமடைந்தனர்.

குண்டுவெடிப்பில் ஒருஉல்லாச விடுதியும் கடைகளும் சேதமடைந்தன.

பழங்குடி இன மக்கள் வாழும் இந்தப் பகுதியில் அல்ஹைடியா தீவிர வாதிகள் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

## பணயக்கைதிகளை விடுவிக்க காலக்கெடு நீடிப்பு

(பாக்தாத்)

ஈராக் நாட்டில் கிறிஸ்தவ அமைதிக் குழு சார்பில் பணியாற்றிய நான்கு பேர் இரண்டு வாரங்களுக்கு முன்பு கடத்தப்பட்டனர். அவர்களை விடுவிக்க வேண்டுமானால் ஈராக்கில் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று தீவிரவாதிகள் கோரினார்கள். இதற்காக அவர்கள் விதித்த கெடு நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்தது. இந்தக் கெடுவை மேலும் இரண்டு நாட்களுக்கு தீவிர வாதிகள் நீடித்துள்ளனர் இந்தத் தகவலை அல்ஜசீரா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. பணயக்கைதிகளில் ஒருவர் கனடாவில் வசிக்கும் இந்திய ஆவார். அவர் பெயர் ஹர்மீத், சிங்சூடன் ஆகும்.

## சென்னை டெஸ்டில் எமது அணியின் பந்துவீச்சு அபாரமாக இருந்தது



முரளிதரன்

சென்னை டெஸ்டில் எங்கள் அணியின் பந்து வீச்சு மிகவும் அபாரமாக இருந்தது. பலமிக்க துடுப்பாட்ட வரிசைகொண்ட இந்திய அணியை 167 ஓட்டத்தில் சுருட்டுவது சாதாரண காரியமல்ல. இதற்கு முக்கிய காரணம் சமிந்தவாஸ் முக்கியமான நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தி தனது அனுபவத்தை நிரூபித்தார் என்கிறார் சுழல்பந்து வீச்சாளர் முரளிதரன்நான் உட்பட மற்ற பந்துவீச்சாளர்களும் அவருக்கு நல்ல ஒத்துழைப்பு கொடுத்தோம். இந்திய அணியில் அனில்கும்ளேஅட்டகாசமாக பந்து வீசினார். டில்லி இவருக்கு ராசியான மைதானம் இதனால் கும்ளே பந்துவீச்சை கவனமுடன் ஆட வேண்டும். சென்னை டெஸ்ட்சமனில் முடிந்தாலும், எங்கள் அணியின் ஆதிக்கமே அதிகம் இருந்தது. இதனால் டில்லியில் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. முதல் டெஸ்ட் சமனில் முடிந்துள்ளதால் அடுத்த இரண்டு போட்டிகள் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. தொடரைக் கைப்பற்ற வேண்டுமெனில் டில்லியில் வெல்ல வேண்டியது அவசியம் என்றார்.

## கேணல் கிட்டு நினைவான கால்பந்து சுற்றுப்போட்டி -2006

வருடாந்தம் மாவட்ட அளவில் மாவீரர் நினைவான கால்பந்து சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி ஈட்டிய அணிகளை ஒன்றிணைத்த தமிழீழ தேசிய அளவிலான கேணல் கிட்டு நினைவான கால்பந்து சுற்றுப்போட்டி 10.01.2006 தொடக்கம் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கு 50.000,25.000 என பணப்பரிசுகளுடன் பதக்கங்கள்,சான்றிதழ்கள் என பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என்பதையும் அறிவித்துக் கொள்வதுடன் போட்டியில் கலந்து கொள்ளும் அணிகள் தங்களை தயார்ப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் மேலதிக விபரங்களை தங்கள் மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர்களைத் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ விளையாட்டுத்துறையினர் கேட்டுக் கொள்கின்றனர்.




## இங்கிலாந்து -பாக். ஒரு நாள் போட்டி இன்று ஆரம்பம் -லாகூரில் முதல்போட்டி



பாகிஸ்தான்-இங்கிலாந்து அணிகள் இடையிலான முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி லாகூரில் இன்று தொடங்குகின்றது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் பயணம் செய்து விளையாடி வருகிறது. இவ்விரு அணிகளிடையே நடந்த மூன்று டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொண்ட தொடரை 2-0 என்ற கணக்கில் பாகிஸ்தான் கைப்பற்றியது. இதன் முதல் ஆட்டத்தில் 22 ஓட்ட வித்தியாசத்திலும் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்டில் இனிங்ஸ் மற்றும் 100 ஓட்ட வித்தியாசத்திலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. இரண்டாவது டெஸ்ட் சமனில் முடிந்தது.

இந்நிலையில் பாகிஸ்தான்- இங்கிலாந்து அணிகள் இடையிலான ஐந்து ஒரு நாள் போட்டி கொண்ட தொடரின் முதல் ஆட்டம் இன்று லாகூரில் நடக்கிறது. பாகிஸ்தான் அணியை பொறுத்த வரையில் புத்துணர்ச்சி பெற்ற அணியாக தற்போது உள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றதன் மூலம் பாகிஸ்தான் அணியினர் உற்சாகத்தில் உள்ளனர். எனவே டெஸ்ட் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதைப்போல் ஒரு நாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணியினர் சிறப்பாக ஆடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் டெஸ்ட் தொடரை இழந்துள்ளதால்,ஒரு நாள் போட்டித் தொடரைக் கைப்பற்ற வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளது.பாகிஸ்தான் பயணத்திற்கு முன்பு வரை தலை நிமிர்ந்து நின்ற இங்கிலாந்து அணி, பாகிஸ்தான் வந்த பின்னர் மோசமான தோல்வியை சந்தித்து வருகிறது. டெஸ்ட் தொடரை இழந்தது மட்டுமல்லாமல் அதனைத் தொடர்ந்து நடந்த பாகிஸ்தான் 'ஏ' அணிக்கு எதிரான ஒருநாள் பயிற்சி ஆட்டத்திலும் இங்கிலாந்து அணி தோல்வி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று கோட்லா மைதானத்தில்





இந்தியா- சிறிலங்கா கிரிக்கெட் வீரர்கள் டில்லியில் கடும் பயிற்சி மேற்கொண்டனர். இந்திய- சிறிலங்கா அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி டில்லியில் பெரோஸா கோட்லா மைதானத்தில் இன்று முதல் நடைபெறுகிறது. டில்லியில் அண்மையில் நடைபெற்ற குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து. போட்டி நடைபெறும் அரங்கு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடுமையான பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வீரர்கள் பயிற்சி மேற்கொண்ட இடமருகே பத்திரிகையாளர்களும் அனுமதிக்கப்படவில்லை

வியாழக்கிழமை இந்திய அணியினரைக் காட்டிலும் இலங்கை வீரர்கள் அதிக நேரம் பயிற்சி மேற்கொண்டனர். காலை பத்து மணிக்கு அரங்குக்கு வந்த வீரர்கள் ஒரு மணிவரை பயிற்சி மேற்கொண்டனர்.

இவ்விரு அணிகளிடையே சென்னையில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டி மழை காரணமாக பாதிக்கப்பட்டு முடிவு கிடைக்காமல் போனது. மூன்றாவது டெஸ்ட் போட்டி அகமதாபாத்தில் நடைபெறவுள்ளது.



சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பகுதியைப் பார்வையிடும் இலங்கைக்கான நோர்வேத்தூதுவர்.
(படங்கள்:- பிரதீபன், லோகீசன்)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை நோர்வேத் தூதுவர் பார்வையிட்டார்

(அலுவலக செய்தியாளர்)

**இலங்கைக்கான நோர்வே நாட்டின் தூதுவர் ஹான்ஸ்பிறஸ்கர் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் வசித்துவரும் முல்லைத்தீவு மக்களின் பிரச்சினைகளை நேரில் சென்று பார்வையிட்டார்.**

நேற்று முன்தினம் நண்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து தரைவழிப் பாதையூடாக கிளிநொச்சியை வந்தடைந்த இவர் சுனாமியால் பெரிதும் பாதிப்படைந்து இப்போது இடைத்தங்கல் முகாம்களில் வசித்துவரும் மக்களைச் சந்திப்பதற்காக முல்லைத்தீவுக்குச் சென்றார்.

பிற்பகல் 2.30 மணிக்கு முல்லைத்தீவை வந்தடைந்த இவர் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை இனங்கண்டு செயற்படுத்தும் செயலணிக்குழு அலுவலகத்திற்குச் சென்று மக்களின் தேவைகளையும் அவற்றை நிவர்த்தி செய்வதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டார்.

அடுத்ததாக கடல்பேரலைகளால் அடித்து நொருக்கப்பட்ட முல்லைநகர்,கள்ளப்பாட்டுக்கிராமம் என்பவற்றுக்கு சென்று அழிவுகளைப் பார்வையிட்டார். இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு உண்ணாப்பிலவில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி இடைத்தங்கல் முகாமிற்குச்சென்று மக்களின் குறைகளைக்கேட்டறிந்து கொண்டார். நீண்டகாலமாகிவிட்ட இடைத்தங்கல் முகாம்களையும் அவற்றின் தற்போதைய நிலைகளையும் நேரடியாகப் பார்வையிட்டார். இடைத்தங்கல் முகாமில் வசித்துவரும் சிறார்களுடன் உரையாடினர். இதில் நோர்வேத்தூதுவருடன் தூதரக அதிகாரியொரு வரும் கலந்து கொண்டார்.

நோர்வேத்தூதுவருடன் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்,தமிழர் புனர்வாழ்வுக்கழக சுனாமித்திட்டப்பணிப்பாளர் அமிர்தாப், திட்டமிடல் செயலகத்தைச் சேர்ந்த யாழ்அமுதன், சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த சுடர்மணி,யாழவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (லோ.தீ.20)

## பேராதனைப் பல்கலைக்கழக கலை முதற்தேர்வு பரீட்சைகள்

(வவுனியா செய்தியாளர்)

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைப் பிரிவின் கலை முதற்தேர்வு பரீட்சைகள் நடைபெற உள்ளதாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சைகள் இம்மாதம் 12ஆம் திகதி முதல் சனவரி முதலாம் திகதிவரை யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி மட்டக்களப்பு, அனுராதபுரம் ஆகிய இடங்களில் உள்ள பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளதாகவும், பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதோர் -0812-388786 என்றதொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளுமாறும் இம்மாதம் 23ஆம் திகதி நடைபெற இருந்த புவியியல் பகுதி-3 பரீட்சை சனவரி முதலாம் திகதி நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பெறுபேறுகள் திங்கள் வெளிவரும்

யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு கடந்த வருட நடுப்பகுதியில் நடாத்திய பொதுக் கலைமாணி பகுதி 1 பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடப்படும் என்று வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு சிரேஷ்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (10)

## உணவு கையாளும் நிலையங்களில் சுகாதார சேவையினர் பரிசோதனை



(நமது நிருபர்)

தமிழீழ சுகாதார சேவைகளின் விசேட சுகாதார நடவடிக்கைப் பிரிவினரும், தொற்று நோய்த்தடுப்புப் பிரிவினரும் இணைந்து நேற்று முன்தினம் விசுவமடுநகர், சந்தை, றெட்பானா, உடையார்கட்டுநகர், சந்தைஉள்ளடங்கலான பகுதிகளில் அமைந்துள்ள உணவு கையாளும் நிலையங்கள், மற்றும் உணவுடன் தொடர்புடைய நிலையங்களில் பரிசோதனை மேற்கொண்டனர்.

இப்பரிசோதனையின் போது அதிகளவான சுகாதாரக் குறைபாட்டுடன் காணப்பட்ட மூன்று உணவகங்களினதும்,இரண்டு வெதுப்பகங்களினதும் உணவு கையாளும் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு மூடப்பட்டுள்ளன.

பத்து நிலையங்களுக்கு அடையாளக் குற்றப்பணமும் அறவிடப்பட்டுள்ளது, அத்துடன் பொதுச்சுகாதாரம், உணவுச்சுகாதாரம் தொடர்பான கருத்தூட்டல்களும் நடாத்தப்பட்டது.

விசுவமடு, உடையார்கட்டுப்பகுதி வர்த்தகர்களுக்கான சுகாதாரக் குழுவும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் இழந்த கல்வி செயற்றிட்ட பரிசளிப்பு விழா

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்படும் இழந்த கல்வி செயற்றிட்ட பரிசளிப்பு விழா இன்று காலை 9.00 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா தெற்கு கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மீத்திறன் குறைந்த மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் வவுனியா மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்படும் இழந்த கல்வி செயற்றிட்டத்தில் பங்குபெறும் மாணவர்களிடையே நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளிலும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான இப் பரிசளிப்பு விழாவில் அதிபர்களையும், செயற்றிட்ட ஆசிரியர்களையும், செயற்றிட்ட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.ஆர்.ஏ ஒஸ்வேல்ட் கேட்டுள்ளார். (10)

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பாடசாலை ரீதியாக கௌரவிக்கப்பட்டு வருகின்றனர்.



தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்கள் கௌரவிப்பும் பள்ளி சேமிப்பு அலகிற்கான அதிர்ஷ்ட கணக்கு இலக்கத் தெரிவும் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் சிறப்புற நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இரண்டு மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 16 மாணவர்களையும் சேரன் வாணிபத்தினர் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

மேற்படி நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் வணிகமன்ற பொறுப்பாசிரியர் வரதன் தலைமையில் நடைபெற்றது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இரண்டு மாணவர்களுக்கு தலா 1000 ரூபா வீதம் பள்ளி சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட புத்தகம் வழங்கப்பட்டது அத்துடன் பாராட்டுப் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டது.

தொடர்ந்து ஏனைய 16 மாணவர்களுக்கும் பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பாடசாலைபையும், சேரன் வாணிபத்தின் உற்பத்திப் பொருட்கள் அடங்கிய பொதியும் வழங்கப்பட்டது. அத்துடன் புலமைப்பரிசில் மாணவர்களை கற்பித்த ஆசிரியர்கள் இருவரும் மாணவர்களால் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிளி ஸ்கந்தபுரம் இல.01 அ.த.க. பாடசாலையில் 2005 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பும்,ஆசிரியர்களுக்கு சேவை நலன் பாராட்டு நிகழ்வும் பாடசாலை மண்டபத்தில் சிறப்பான முறையில் நடைபெற்றது. இப்பாராட்டு நிகழ்வு நேற்று முன்தினம் மு.ப 11.00 மணியளவில் அ.த.க. பாடசாலை அதிபர் ப.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

2005ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கோணேஸ்வரன் சதுர்ச (138புள்ளிகள்) சாபரத்தினம் மேதினா (132 புள்ளிகள்), இவர்களுடன், 100 புள்ளிகளுக்கு மேற்பட்ட பத்து மாணவர்களும் கௌரவிக்கப்பட்டுள்ளனர். இம் மாணவர்களுக்கு “தளிர்கள்” கணக்கில் பணம் வைப்பிலிடப்பட்டது.

இதே வேளை கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்திலிருந்து 2005 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யெய்திய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வித்தியாலய முதல்வர் ம.உமாசங்கர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்களான எஸ். கனகரத்தினம், எஸ்.விஜயநாதன் ஆகியோர் கலந்து கொண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய க.செந்துஜன், ந.சதுசன் ஆகியோருக்கும் மற்றும் மேற்படி பரீட்சையில் 100 புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கும், பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். அத்துடன் மகாதேவா ஆச்சிரம பெண்கள் கல்லூரி மாணவி, செல்வி கோபிகாவிற்கு சிறப்புப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (சோ.கு,தீ.கா)

# இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக அணிதிரண்டு குரல் கொடுப்போம்

## யாழ். மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் அமையம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

**எமது மாணவர்கள் தொடர்ந்தும் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு முட்கம்பி வேலிகளுக்குள் இருந்து தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஒழுங்காகக் கடைப்பிடிக்காத சிறிலங்கா இராணுவம் எமது மாணவர்களின் கல்விக்கூடங்களை இராணுவ முகாம்களாக்கி முட்கம்பிவேலிகளுக்குள் எமது மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை செய்வதென்பது பெருந் தடங்கலாக இருந்து வருவது மாணவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருந்து வருகின்றன. இதனை நாம் பலமுறை சர்வதேசத்திற்கும், சிறிலங்கா அரசுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். ஆனால் அவர்கள் வாய்மூடி மௌனிகளாகவே இருந்து வருகின்றனர் என யாழ். மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் அறிக்கை விடுத்துள்ளது**

அவ் அறிக்கையில் மேலும்; இதனால் மாணவர்கள் சிறிலங்கா இராணுவத்தின் அடக்கு முறைக்கெதிரான அகிம்சை வழியில் தமது போராட்டத்தை ஆரம்பித்தனர். எமது மாணவர்களின் போராட்டத்தை அடக்கும் முகமாக மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியும், தடியடிப்பிரயோகம் செய்தும், வன்முறைகளைக் கட்டவிழ்த்தும் விட்டுள்ளனர்.

இத்தாக்குதல் முதற் தடவையுமல்ல 05.12.2005 அன்று ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவர்கள் நடத்திய அகிம்சை ரீதியான போராட்டத்தில் 50 இற்கும் மேற்பட்ட கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியதுடன் 06.12.2005 அன்றும், தமது அகிம்சை வழிப்போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது துப்பாக்கிக் பிரயோகம், செய்ததும் குண்டாந்தடிப்பிரயோகம் செய்ததும் 07.12.2005 அன்று யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக வைத்து எமது மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் அவர்களை கடுமையாகத் தாக்கியுமுள்ளனர். இது மாணவர்கள் மீது புரிந்துள்ள அடாவடித் தனத்தை தெளிவாகக் காட்டியுள்ளது. இவ்வாறு இராணுவத்தினர் எம்மாணவர்கள் மீது வன்முறைகளைப் பிரயோகித்து எம்மைச் சீண்டி வன்முறைக்கு இழுக்கின்றனர். அவர்கள் ஒன்றை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் மாணவர் சமூகம் மீது வன்முறையை பிரயோகிப்பதால் எதிர்வரும் நாட்களில் பாரிய பின் விளைவுகளை சிறிலங்கா இராணுவம் சிந்திக்க வேண்டிவரும். மாணவர் மீதான சிறிலங்கா இராணுவத்தின் வன்முறை தொடருமாயின் எமது அகிம்சை வழிப்போராட்டத்தை நிறுத்தி ஆயுத வழிப்போராட்டத்தில் குதிக்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொடிகாமம் பிரதேச அரசியல்துறை செயலகம் படையினராலும் பொலிசாராலும் சோதனை

கொடிகாமம் கச்சாய் வீதியில் உள்ள கொடிகாமம் பிரதேச அரசியல்துறை அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் அறுபதிற்கும் மேற்பட்ட படையினர், பத்திற்கும் மேற்பட்ட பொலிசாரால் பூட்டிய கதவுகள் திறக்கப்பட்டு தீவிர சோதனைகள் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது. அலுவலகத்திற்கு அருகே உள்ள குடும்பத்தவரிடம் ஆயுதங்கள் இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறி இச் சோதனை நடவடிக்கைகள் ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக இடம்பெற்றிருப்பதாகத் தெரியவருகிறது. யாழ். குடாநாட்டை விட்டு அரசியல்துறையினர் வெளியேறியதற்குப் பின்னர் இடம் பெற்ற மிகப்பெரிய சோதனை நடவடிக்கையாக இது கருதப்படுகின்றது. அலுவலகத்தை துருவிச் சோதனையிட்ட படையினர் வெறுங்கையுடன் திரும்பிச் சென்றிருப்பதாகத் தெரிய வருகிறது. (28)

## யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி பரீட்சைகள் பற்றி அறிவிப்பு

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி இறுதிப்பரீட்சைக்கான செய்முறைப்பரீட்சைகள் அனைத்தும் 12.12.2005(திங்கள்) தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது. இதனால் மாணவர்கள் அனைவரும் அத் திகதியில் கல்லூரிக்கு சமுகம் தருமாறும் அத்துடன் இறுதி எழுத்துப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் 19.12.2005 (திங்கள்) தொடக்கம் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் [illegible]லய மட்டப் பரீட்சை மீள ஆரம்பித்தலுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கல்லூரி பதில் அதிபர் அறிவித்துள்ளார். (28)

## நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பொது மக்கள் மீதான கெடுபிடி

யாழ். குடாநாட்டின் அனைத்து பிரதேசங்களிலும், சிறிலங்காப்படையினரின் சோதனை நடவடிக்கைகளும், பொதுமக்கள் மீதான கெடுபிடிகளும், நாள்தோறும் அதிகரித்து வருவதாகத் தெரிய வருகிறது. குடாநாட்டின் வடமராட்சி தென்மராட்சி, தீவகம் போன்ற பிரதேசங்கள் எங்கும், மூலைக்கு மூலை அனைத்து வாகனங்களும் மறிக்கப்பட்டு சோதனை என்ற பெயரில் ஆயுதம் தரித்த சிறிலங்காப் பொலிசார் மற்றும் படையினர் பொதுமக்களை அச்சுறுத்தி வருவதுடன் வாகன அனுமதிப் பத்திரங்கள் அடையாள அட்டைகளைப் பொலிசார் பறித்து செல்வதுடன் அவற்றை தமது காவல் நிலையங்களில் வந்து பெற்றுக்கொள்ளும்படி பொதுமக்களை அச்சுறுத்தி வருவதாகவும் தெரியவருகிறது.

இதனால் பல இடங்களில் சிறிலங்காப் படைகளுக்கும் பொது மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதுடன் பதற்றமானதொரு சூழல் நிலவி வருவதாக தெரிய வருகிறது.

## வைத்தியசாலை ஊழியர்கள் மீது சோதனைக் கெடுபிடி எதிராகப் போராட்டம் நடத்தப் போவதாக எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்-தெல்லிப்பழை வைத்தியசாலைக்குச் செல்லும் வைத்தியசாலைப்பணியாளர்கள் மீது இராணுவம் தொடர்ந்தும் சோதனைக் கெடுபிடிகளை மேற்கொண்டுவந்தால் வைத்தியசாலைப் பணியாளர்களும் இராணுவத்திற்கு எதிரான பேராட்டங்களில் குதிப்பர் என்று அவ் வைத்தியசாலை பணியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வலிகாமம் வடக்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் இயங்கி வருகின்றமையைக் காரணம் காட்டி தெல்லிப்பழை வைத்தியசாலையில் பணியாற்றச் செல்லும் ஊழியர்கள் மீதான சோதனைக் கெடுபிடிகளை இராணுவம் அண்மைக் காலமாகத் தீவிரப்படுத்தியுள்ளது.

இவ்வாறு படையினர் தீவிரப் படுத்தியுள்ள சோதனைக் கெடு பிடிகளினால் தெல்லிப்பழை வைத்தியசாலைப்பணியாளர்கள் இயல்பாக வைத்தியசாலைக்கு சென்று பணியாற்ற முடியாதளவு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தினமும் படையினரது இத்தகைய சோதனைக் கெடுபிடிகளுக்கு முகம் கொடுத்து சலித்துள்ள இவ் வைத்தியசாலைப்பணியாளர்கள் தமது இயல்பான வைத்திய சேவைப் பணிகளுக்கு இடையூறாக அமையும் இராணுவசோதனைக் கெடுபிடிகள் நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரியுள்ளதுடன் தம் மீதான சோதனைக் கெடுபிடிகளை இராணுவம் தொடர்ந்தும் தீவிரப்படுத்துமேயானல் தாம் தமது கடமைகளுக்குச் செல்லாது பகிஷ்கரிப்புச் செய்வதுடன் படையினருக்கு எதிரான போராட்டங்களையும் நடத்தப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## மின்சாரம் வழங்க அரசு இழுத்தடிப்பதாலேயே திருட்டுத் தனமான மின்சார பாவனை அதிகரிக்கிறது

### வலி – தென்மேற்கு பிரதேச செயலர்

(வலிகாமம்)

மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு மின் இணைப்பு வழங்க அரசு இழுத்தடிப்புச் செய்வதனால் தான் திருட்டு மின் பாவனைகள் அதிகரித்து வருகின்றன. அச்சட்டவிரோதமான மின் பாவனைகளால் மனித உயிரிழப்புக்களும் ஏற்பட்டு வருகின்றது என வலி-தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி. ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

வலி-தென்மேற்குப் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் ஒன்றிலேயேஅவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; சட்ட விரோதமான மின் பாவனையை ஒழித்து அதன் மூலம் ஏற்படும் மனித உயிரிழப்புக்களைத் தடுக்க வேண்டுமாயின்மின் இணைப்புப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு உரிய காலத்தில் மின்சாரம் வழங்கப்பட வேண்டும். இதை சம்பந்தப்பட்ட திணைக்களம் அக்கறையோடு அமுல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (37)

## கல்வித்துறை உத்தியோகத்தர்களுக்கு வட்டியில்லா சம்பள முற்பணம்

(வலிகாமம்)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வித்துறை உத்தியோ கத்தர்களுக்கு வட்டியில்லா சம்பள முற்பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

இச்சம்பள முற்பணம் வழங்குவதற்கென அரசதிறைசேரி ஐந்து கோடியே அறுபது இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆழிப்பேரலை,மழைவெள்ள அனர்த்தங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட கல்வித்துறைசார் உத்தியோகத்தர்களுக்கே இச் சம்பள முற்பணம் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. அந்தந்தப் பிரதேசங்களின் வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச செயலர்கள் உள்ளடங்கலாக மூவர் கொண்ட குழுவின் சிபார்சுடன் கடுமையாகப் பாதிக் கப்பட்டவர்களின் அவசர தேவையைப் பூர்த்தி செய்வதற்கே இம்முற்பணம் வழங்கப்படவுள்ளது. (37)

## முழுத்தொகைக்கும் உலர் உணவு

(நல்லூர்)

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட சமுர்த்தி முத்திரைக்கான நிவாரணப் பொருட்கள் சேமிப்புகளுக்கு கழிக்காது முழுத்தொகைக்கும் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

கடந்த வாரத்தில் இடம் பெயர்ந்தோர் நலன்புரிநிலையங்களில் தங்கி வாழும் மக்கள் பிரதேச செயலகங்களின் முன்னால் நடத்திய மறியற் போராட்டத்தின் காரணமாகவே இம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே சமுர்த்தி பெறுபவர்களுக்கு வழங்கப்பட்ட முத்திரையில் ஒரு பகுதி சமுகநலத்திட்டம், வீட்டுத் திட்ட சீட்டிழுப்பு கட்டாய சேமிப்பு எனக் கழிக்கப்பட்டு குறிப்பிட்ட தொகைக்கு மட்டுமே பொருட்கள் [illegible]ங்கப்பட்டிருந்தமை குறிப்பிட[illegible]து. (41)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதிப் பரீட்சைகள்

உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்தினால் நடாத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான அனுமதிப் பரீட்சைகள் எதிர்வரும் 17.12.2005 சனிக்கிழமை வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும். இப் பரீட்சைகள் 03.12.2005 நடைபெறவிருந்தமையும் அன்றைய தினம் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை ஏற்கனவே திட்டமிட்டபடி கல்வியியல் முதுமாணிக் கற்கைநெறிக்கான அனுமதிப் பரீட்சைகள் எதிர்வரும் 11.12.2005 ஞாயிற்றுக்கிழமை நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரீட்சைகள் யாவுமே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மட்டுமே நடைபெறும் என்பதை பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ளவும்.

மேலும் கடந்த ஆண்டு கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து பட்டம் பெற்ற மாணவர்கள் தங்கள் பட்டச் சான்றிதழ், பரீட்சைப் பெறுபேற்று அறிக்கை என்பனவற்றை நேரில் சமூகமளிப்பதன் மூலம் உயர் பட்டப் படிப்புக்கள் பீட பீடாதிபதி அலுவலகத்திலிருந்து எதிர்வரும் 12ஆம் 13ஆம் திகதிகளில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.இதன்போது மாணவர்கள் மாணவர் அடையாள அட்டை, பட்டமளிப்பு அங்கி மீள ஒப்படைத்தமைக்கான பற்றுச்சீட்டு என்பனவற்றை ஒப்படைத்தல் வேண்டும்.

## 24 மணிநேர மின்சாரம் வழங்கக்கோரி வேலணை, ஊர்காவற்றுறை மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகத்தில் உள்ள ஊர்காவற்றுறை மற்றும் வேலணை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தமது பகுதிகளுக்கு 24 மணிநேர மும் மின்சார விநியோகம் வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பகுதிகளுக்கு இலங்கை மின்சார சபையால் பகுதிநேரமாகவே மின்சாரம் சுழற்சிமுறையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனினும் இச் சுழற்சி முறை மின் விநியோகம் மூலம் மாணவர்களோ அல்லது தொழில் முயற்சியாளர்களோ முழுமையான பயனை அடைய முடியாத நிலைஉள்ளதைச் சுட்டிக்காட்டியே மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர் அப்பகுதி மக்கள், (33)

# மழைநீரில் நனையலாமா?

உலகிலேயே சுத்தமான நீர் மழைநீர் என்று சொல்வார்கள். ஆனால் அதுவும் உண்மையில்லை. காற்று மாசுக்களோடு



கலந்து விடுவதால் நிலத்தில் விழும் முன்பே மழைநீர் அசுத்தமடைந்து விடுகிறது. ஆகவே மழைநீரில் நனைவதைத் தவிர்த்து விடுங்கள்.

வெளியில் சென்றால் குடை, மழைபாதுகாப்பு ஆடைகள் பயன்படுத்தவும். மழையினால் தடிமன், காய்ச்சல் போன்றவை வந்தால் உடனடியாக சிகிச்சை எடுங்கள். இல்லையெனில் கிருமிகள் வேகமாக பிறருக்குத் தொற்றும். நீங்கள் நோயைப் பிறருக்குத் தரும் தாங்கிகளாக இருக்க நேரிடும்.

மழைநீரில் இறந்துபோன விலங்குகளின் உடல்கள் நீரில் அடித்து வரப்பட்டு ஆங்காங்கே அழுகிக் கிடக்கலாம். இந்தக் கிருமிகள் உங்கள் உடலில் பரவுமானால் எலிக்காய்ச்சல் எனப்படும் லெப்டோஸ்பைரோசிஸ் நோய்த்தாக்குதல் வரும்.

காய்ச்சல் வந்தால் அது டைபோய்ட், மலேரியா அல்லது எலிக்காய்ச்சலாக இருக்கக்கூடும். காய்ச்சல் அறிகுறி வந்ததும் மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை முறைகளை மேற் கொள்ளுங்கள்.

# வித்தியாசமான பாலூட்டும் விலங்கினம்

போணியோ வனப்பகுதியில் வித்தியாசமான பாலூட்டும் விலங்கினம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



அவ்வனப்பகுதியில் ஆய்வு மேற்கொள்ளச் சென்ற இருவர் அதனைப் புகைப்படம் எடுத்துள்ளனர். அது வீட்டில் வளர்க்கப்படும் பூனையை விட சற்று சிறிதானதாகும். அதன் வால் கருஞ்சிவப்பு நிறமாக நீண்டிருக்கும். அங்குள்ள மக்களும் வனஉயிரினஆய்வாளர்களும் அது அங்கிருப்பதை அதற்கு முன்பு கண்டதில்லை என்று தெரிவித் துள்ளனர்.

இது மிகவும் அரிதான விலங்கின மாதலால் காடழித்தல் மூலமாக இவை இழக்கப்பட்டுவிடும் என்றும் இதனைப் பாதுகாக்க துரித நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேசியாவின் போணியோ காடுகளில் இந்த விலங்கு காணப்படுவதால் தென்னாசிய காடுகளில் இவை பரவலாகக் காணப்படலாம் என இதனைக் கண்டறிந்த வனவிலங்கு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.


பல பிராணிகள் வந்து வந்து போனபோதிலும் இரண்டு மட்டுமே தங்களின் புகைப்படத்துக் குள்ளாகியதாக அதனைப் படம் எடுத்த ஆய்வாளர் தெரிவிப்பதுடன் இவை லெமூர் இன குரங்கினத்தைப் போல காட்சியளித்தாலும் அந்த வகைக் குரங்கினம் போணியோ வனப்பகுதியில் காணப்படவில்லை என்றும் கூறுகிறார்.

இந்த நீண்டவாலையுடைய பிராணி மடகாஸ் கார் தீவுக்குரியதாக இருக்கலாம் என்றும் கீரிப்பிள்ளையினுடைய உருவத்தை ஒத்திருப்பதால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மலேசியா இந்தோனேசியா காடுகள் வேறு பயிர்ச்செய்கைக்குட்படுத்த அழிக்கப்படுவதால் இவ்வகை பிராணிகள் அழிக்கப்படுவதாகவும் அவ்வரசுகள் அதனைத் தடுக்க முன்வரவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# கல்லீரலைக் காப்பாற்ற....

கடுமையாக குடிப்பழக்கம், உடல் பருமன் மற்றும் அளவுக்கதிகமான இரும்புச்சத்து உடையவர்களுக்கு கல்லீரல் பாதிப்பு உண்டாகும். இந் நிலையில் பால், தேநீர் போன்ற பானங்கள் குடிப்பவர்களுக்கு இந்த



பாதிப்புக் குறையும் என்று அமெரிக்க ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

ஒரு நாளைக்கு பால் அல்லது தேநீர் குடிப்பவர்களுடன் ஒப்பிடும் போது இரண்டு அல்லது கூடுதலான கோப்பை குடிப்பவர்களுக்கு கடுமையான கல்லீரல் நோய்களின் பாதிப்பு பாதியாகக் குறையும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். அதே சமயம் மேற்குறிப்பிட்ட காரணங்களைத் தவிர வேறு விதமான கல்லீரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த நன்மையும் கிடைக்காது.

# புற்றுநோயை எதிர்க்கும் முட்டைக்கோவா

குருசி:பெர் தாவர குடும்பத்தைச் சேர்ந்த முட்டைக் கோவாவில் புற்றுநோய் எதிர்ப்புப் பொருட்கள் உள்ளன. சல்போராபேன் என்ற இந்த வேதிப்பொருட்கள் புற்றுநோய் கிருமிகளை அழிக்கும் திறன் கொண்டவை. ஆனால் Gstmi என்ற குறிப்பிட்ட ஜீன்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பவர்களுக்கு இந்தக் காய்கறிகளால் பலன் கிடைப்பதில்லை. ஏனெனில் Gstmi ஜீன்கள் கணிசமான அளவுக்கு இல்லாவிட்டால் உடம்பில் சல்போராபேன் வேதிப்பொருள் தங்காது சில மணி நேரங்களில் காணாமல் போய் விடும். இந்நிலையில் லண்டன் உணவு ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் புதிய முட்டைக் கோவாக்களை உருவாக்கி உள்ளனர். இந்த புத்தம் புது காய்கறிகளில் சல்போராபேன் வேதிப்பொருள் நிறைய இருப்பதால் புற்றுநோய் ஏற்படாது. தற்போது ஆய்வு நிலையில் இருக்கும் இந்தக் கோவா இன்னும் மூன்று ஆண்டில் தயாராகி விடும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளார்கள்.

# ஞாபகசக்தி அதிகரிக்க

தற்போது பரவலாக எல்லோருக்கும் ஞாபக மறதி ஏற்படுகிறது. அதிக அளவு வேலைப்பளு மனிதனின் நினைவு சக்தியை இழக்கச் செய்கிறது. இதைத் தவிர்க்க தினமும் பாலில் மஞ்சள் சேர்த்து குடித்தால் ஞாபக சக்தி அதிகரிக்குமாம்.

அதற்கு மூளையில் உள்ள லிம்பிக் சிஸ்டம் என்ற அமைப்பு சிறப்பாக செயல்படுகிறதாம். இதனால் மூளை சுறுசுறுப்பாகி ஞாபக சக்தி குறைவதை கட்டுப்படுத்துகிறது.

# மிகவும் வரண்ட "அட்டகாமா" பாலைவனம்

உலகில் காணப்படும் பாலைவனங்களில் தென்னமெரிக்காவின் "அட்டகாமா" பாலைவனமே மிகவும் வரண்ட பாலைவனமாகும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். அங்கு மழைவீழ்ச்சி மிகக் குறைவாகக் காணப்படுவதாகவும் அதற்கான மழை வீழ்ச்சி குறைவாகக்காணப்படுவது ஏன் என்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது.




இங்கு காணப்படும் உயர் வரட்சி சுமார் 20 மில்லியன் வருடங்களாகத் தொடர்கின்றது. அங்கு காணப்படும் வெடியுப்பு முன்னர் வெடி பொருட்கள் உற்பத்திக்குப் பயன் படுத்தப்பட்டன. மழை குறைவு என்ற காரணத் தினாலேயே இந்தப் பொருட்கள் அங்கு நிறையக் காணப்படக் காரணமாகும்.

அட்டகாமாப் பாலைவனத்தின் சில பிரதேசங்கள் ஒருதுளி மழையைக் கூடக் காணாத பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. அங்கு 12 இலட்சம் வருடங்களாக நீரைக் கண்டிராத ஆற்றுப்படுக்கைகள் காணப்படுவதாக ஜேர்மன் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார். எனினும் மூடுபனி காரணமாக அங்கு சற்று ஈரலிப்பு இருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாலைவனம் அந்தாட்டிக்காவின் வரண்ட பள்ளத்தாக்கு நமிப் பாலைவனம் ஆகியவற்றுக்கெல்லாம் மிகப்பழைமைவாய்ந்ததாகும்.

இது அன்டீஸ் எரிமலை செயற்பாட்டுக்கு உதவியளிப்பதுடன் அவ்வப்போது நிலநடுக்கம் ஏற்படுவதற்கும் காரணமாகவுள்ளது.

# மூட்டுவலிக்கு ஒரு முற்றுப்புள்ளி



மனிதஉடலில் மிக முக்கிய பங்கு வகிப்பது எலும்புகளாகும். அவை நன்றாக உள்ள போதுதான் ஓட முடிகிறது, விளையாட முடிகிறது நடக்க முடிகிறது. மற்றும் வேலைகளைச் செய்ய, நாட்டியமாட முடிகிறது.

நாற்பது வயதைத் தாண்டியவுடன் நம்மில் பலரும் அல்லற்படுவது மூட்டு வலியிலும், முதுகு வலியிலும்தான். பக்கத்துவீதிக்கு நடந்து செல்லக்கூட முடியாமல் வாகனங்களில் செல்கிறார்கள் பலர். எதனால் என்றால் மூட்டு வலியால்தான். காயங்கள், நோய்த்தொற்றுக்கள், வெள்ளை அணுக்கள் அதன் வகையைச் சேர்ந்த வெண்புரதச் செல்களை அந்நியப் பொருளாக நினைத்து அழித்து விடுதல், சைட்டோகீன் என்ற புரதம் அதிகமாக சுரப்பதால் அழற்சி போன்றவை ஏற்படுதல் இவை தவிர, பிறவி, எலும்புத்தேய்மானம், சவ்வு பாதிப்பு, மூட்டில் சுரக்கும் நீரின் மாறுபாடுகள், உடற் பருமன் போன்றவற்றால் மூட்டுவலி ஏற்படுகிறது.

வயதானவர்களுக்கு வலி வருவது எதனால் என்று பார்த்தால் எலும்புத் தேய்மானத்தினால் என்பது மிக முக்கியமானதாகும். எலும்பு நுனியிலுள்ள குருத்தெலும்புகள் மென்மையானதாகும் இவை நாளடைவில் அதிக தேய்மானம் அடைகிறது. ஏனெனில் அதிகப்படியான எடை உள்ளவர்களின் எடையினாலும் அதிகமாக மூட்டுகள் வேலை செய்வதாலும் இவை ஏற்படுகின்றன.

எனவே, உடல் எடை என்பது வயதிற்கும், உடல் உயரத்திற்கும் ஏற்ப சீராக இருத்தல் வேண்டும். இப்படி மூட்டுத்தேய்மானம் உள்ளவர்களுக்கு பாதிக்கப்பட்ட மூட்டுகளில் வலியும், சடக்சடக் என சத்தமும் வரும்.

மூட்டுவலியுள்ளவர்கள் கடைப் பிடிக்கவேண்டியவை.

01. உணவில் சத்துள்ள கீரை, காய்கறி சாப்பிடவேண்டும்.

02. குளிர்ந்த நீரில் குளிப்பதை விடுத்து இளம் சூடான நீரில் குளிக்கவும்.

03. புளிப்புள்ள உணவுகளைக் குறைத்தல் வேண்டும்.

04. பொதுவாக ஈரமான இடங்களில், நீரில் நீண்ட நேரம் இருக்கக் கூடாது.

05. வலி உள்ளபோது தைலங்கள் வலி குறையத் தேய்த்துக் கொள்ளவேண்டும்.

ஹோமியோமுறைப்படி இதற்கு பிரத்தியேக மருந்துகள் நிறைய உள்ளன. மற்ற முறைகளைப் போல மூட்டு வலிக்கு மருத்துவம், மருந்து என்பதை விட இந்த நோய் ஏன் ஏற்பட்டது. காரணம் என்ன? எப்போது இந்த நோய் ஏற்பட்டது? வலி இருக்குமானால் எப்போது அதிகரிக்கிறது அல்லது குறைகிறது? நோயாளிக்கு எந்த உணவு சாப்பிடும்போது நோய் கூடுகிறது? பரம்பரையில் யாருக்கேனும் இந்தப் பாதிப்பு உண்டா? என்பதைக் கேட்டு ஹோமியோ மருந்துகள் கொடுக்கும்போது மூட்டுவலிக்கு முழு நிவாரணம் கிடைக்கிறது.



# சனாதிபதியின் 'மகிந்த சிந்தனைகளான' வரவு-செலவுத்திட்டம் எவ்வாறு சாத்தியமாகும்?

## - பொருளியலாளர்கள் கேள்வி

(கொழும்பு)

*சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டின் நிதி அமைச்சர் என்ற வகையில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த "மகிந்தவின் சிந்தனைகளான" அவரது வரவுசெலவுத் திட்டம் எவ்வாறு சாத்தியமாகும் என பொருளிய லாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.*

முன்னைய வரவு செலவுத்திட்டத்தினை விட சனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷவினால் நாட்டுமக்களுக்கு தனது கொள்கை விளக்கவுரையாக வழங்கப்பட்ட மகிந்தவின் சிந்தனை களில் 80 வீத மானவை தற்போதைய அவரின் வரவு செலவுத்திட் டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவர் உறுதியளித்தவை அனைத் தும் எவ்வாறு அவரினால் செய்யமுடியும், அதற்கான நிதிகளை அவர் எங்கிருந்து பெறப்போகின்றார் என்பதுதான் தற்போது பெரும் கேள்வியாக எழுந்துள்ளது.

வெறுமனே வெளிநாட்டு உதவிகளையும், வெளிநாட்டு முதலீடுகளையும் நம்பியே அவர் இந்த வரவு செலவுத்திட்டத்தினை தயாரித்துள் ளார். ஆனால் இன்று அவர் அரச நிறுவனங் களோ, சொத்துக்களோ ஒருபோதும் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது எனவும் தெரிவித்துள் ளார். இந்த நிலையில் எவ்வாறு வெளிநாட்டு முதலீடுகளை அவர் எதிர்பார்க்கின்றார் என்ற கேள்வியும் எழுகின்றது.

இது தவிர மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உலக வங்கி வழங் கியிருக்கும் ஆலோசனைகளில், மானியங் களின் அளவு மட்டுப்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனால் இந்த வரவு செலவுத்திட்டத்தில் மகிந்தவினால் மானியங்கள் தாராளமாகவே அள்ளி வழங்கப் பட்டுள்ளன.

அடுத்தது அவர் தெரிவித்திருக்கும் எட்டு வீத பொருளாதார வளர்ச்சியை எடுத்து நோக்கி னால் குறைந்தது 5.2வீத பொருளாதார வளர்ச்சி கண்டுள்ள நிலையில் எட்டு வீத பொருளாதார வளர்ச்சியினை எய்துவது ஓரள வுக்கு சாத்தியம்தான். ஆனால் தற்போதைய நிலைமைகளில் எவ்வாறு அவரினால் எட்டு வீத வளர்ச்சியினை எட்ட முடியும் என்ற கேள் வியும் எழுந்துள்ளது.

சிறிலங்காவைப் பொறுத்தவரை 1977ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிகளில் ஆறு வீத பொருளாதார வளர்ச்சி இருந்தது. பின்னர் 1992 வரை ஐந்துவீத வளர்ச்சிகாணப்பட்டது. ஆனால் அதன் பின்னர் பொருளாதார வீழ்ச்சியே காணப் பட்டது. இந்த நிலையில் எட்டு சத வீத பொருளாதார வளர்ச்சி என்பது கானல்நீரே எனத் பொருளியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அது தவிர நாளாந்தம் அதிகரித்துவரும் வாழ்க்கைச் சுமை காரணமாக சேமிப்பு வீதம் மிக மோசமான வகையில் குறைவடைந்து செல்கின்றது.பொருளாதாரவளர்ச்சிக்கு சேமிப்பு அதிகரிப்பு முக்கியமானதொரு காரணி என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த நிலையில் பொருளாதார வளர்ச்சியில் அந்நியச்செலா வணியே தாக்கம் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் இந்த வரவுசெலவுத் திட்டத்தில் அந்நிய செலாவணியினை அதிகரிக்கும் நோக்கமாக ஒரு திட்டமோ, அல்லது அந்நியச் செலாவணியினை ஊக்குவிக்கும் ஒரு திட் டமோ இருக்கவில்லை. இந்த நிலையில் நிதிப்படுத்தலும் மிக முக்கியமானதொன்றாகும்.

நாட்டின் கட்டுப்பாட்டில் இல்லாத எண் ணெய் விலை அதிகரிப்பு இனிவரும் காலங் களில் கண்டிப்பாக பொருளாதாரத்தில் பெரும் தாக்கங்களை நிகழ்த்தும். இந்த நிலையில் அதனை எதிர்வுகொண்டு முகாமைத்து வப்படுத்தத்தக்க எந்தவொரு திட்டமும் இதில் காணப்படவில்லை. பேருந்துகளை இறக்கு வதன் மூலமும், முச்சக்கரவண்டி ரயர்களை இறக்குவதன் மூலமும் போக்குவரத்துச் செல வீனங்களை குறைக்க முடியாது. எண்ணெய் விலையே அதனைத் தீர்மானிக்கப் போகின்றது.

இந்த நிலையில் உலக சந்தையில் சிறிலங்கா ரூபாவின் தரத்தினை தக்கவைக்கும் நடவடிக்கைகளிலாவது முயற்சிகளை எடுக்க வேண்டும். பணவீக்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமான ஒன்று என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தவிர இன்றைய உலகமயமாக் கலுக்கு ஏற்றவகையில் அதி நவீன சந்தைப் படுத்தல், தொழில்நுட்பம், மின்வணிகம், வணிக முகாமைத்துவ அபிவிருத்திக்கு நட வடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எது எப்படியாயினும் முதலில் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றுக்கு நிரந்தர சமாதானமே தேவையாகவுள்ளது. தற்போது ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடு களின் தலைவர்கள் ஆரம்பத்தில் அபிவிருத் திக்கு தயாரித்த திட்டங்கள் போல் சிறிலங்கா வினால் திட்டமிட்டு பொருளாதார வளர்ச்சி காண முடியாவிடினும், ஓரளவாவது அரசியல் இலாபங்கள் இன்றி நாட்டு நன்மைக்கான திட்டங்களை முன்வைத்தால் நிச்சயம் எட்டு வீத பொருளாதார வளர்ச்சிக்கும் மேல் முன்னேற முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

## கிழக்கில் பாதுகாப்பைப் பலப்படுத்த படைகளுக்கு ராஜபக்ஷ உத்தரவு

தமிழ் முஸ்லிம் கிராமங்களின் பாதுகாப் பைப் பலப்படுத்த சனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ சிறிலங்கா படைகளுக்கு உத்தர விட்டுள்ளார். அமைச்சர் பேரியல் அஷ்ரப் மகிந்தவை சந்தித்து கிழக்கு மாகாண பாது காப்பு நிலை குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.சனாதிபதித் தேர்தலின் பின்னர் கிழக்கில் இடம்பெற்றுவரும் கொலைகள் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் பதற்றத்தை தோற்று வித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட் டினார்.

## கதிர்காமர் வழக்கில் கைது செய்யப்பட்டவரின் அடிப்படை உரிமைமீறல் வழக்கு விசாரணை

லக்ஸ்மன் கதிர்காமர் கொல்லப்பட்ட வழக்கில் தம்மை கைது செய்ததை எதிர்த்து அடிப்படை உரிமை மீறல் வழக்கை சிறி லங்கா தலைமை நீதிமன்றில் எஸ்.சிவரஞ் சன் தாக்கல் செய்துள்ளார்.கடந்த செப்ரெம்பர் 24 ஆம்திகதி சிவரஞ்சன் கைது செய்யப்பட் டார். தாம் கொழும்பு குற்றப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதம் என்றும் தமக்கு ஐந்து இலட்சம் ரூபா நட்ட ஈட்டுத் தொகை வழங்க வேண்டும் என்றும் சிவரஞ்சன் தாக்கல் செய்த மனுவில் தெரிவித்திருந்தார்.

சிவரஞ்சனின் மனுவுக்குப் பதில் மனுத்தாக்கல் செய்ய சிறிலங்கா அரசாங்கத் தின் சட்டமா அதிபர் ராஜீவ் குணதிலக்க கால அவகாசம் கேட்டார். இதை ஏற்ற நீதி மன்றம் எதிர்வரும் சனவரி 12ஆம் நாளுக்குள் பதில் மனுத் தாக்கல் செய்ய அனுமதி அளித்துள்ளது.

# பேச்சுவார்த்தைக்கு உதவத்தயார்; இருதரப்புக்கும் உறுதி வேண்டும்

## – நோர்வே பிரதமர் ஸ்டோல்டன்பர்க்



(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் சமா தானப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு உத வத் தயாராக இருப்பதாகவும் ஆனால், நல்ல விளைவுகள் ஏற்பட இரு தரப்பினருக்கும் அதற்கான உறுதி வேண்டும் என்றும் நோர்வே பிரதமர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பர்க் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு நோர்வே தொடர்ந்து உதவ வேண்டும் என இலங்கை அரசு தற் போது கேட்டுக் கொண்டுள்ளது.

அதையடுத்து நோர்வே பிரதமர் அதற்கான உதவிகளைச் செய்யத் தயார் என அறிவித் துள்ளார்.

மூன்று நாள் பயணமாக டில்லி சென் றுள்ள அவர், அமைதிப் பேச்சுவார்த்தை நட வடிக்கைகளை மீண்டும் முறைப்படுத்திக் கொண்டு வருவது மிகப்பெரிய சவாலாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் சமாதான ஒப்பந்தத்தை அனைத்துத் தரப்பினரும் மதித்துச் செயற்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை பிரதமர் மன்மோகன் சிங் கைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத் தும்போது, இலங்கைப் பிரச்சினை குறித்தும் பேசப்படும் எனக் குறிப்பிட்ட நோர்வேயின் பிரதமர் இலங்கை அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேசி, அமைதிப் பேச்சு வார்த்தையை முன்னோக்கிக் கொண்டு செல்வது எப்படி என்பது குறித்து விவாதிக் கப்படும் எனவும் ஸ்டோல்டன்பர்க் தெரிவித் தார். (32)

# வட கிழக்கு பிரச்சினை தொடர்பாக அரசின் கொள்கை மிகவும் சிக்கலானவை

## -ஐ.தே.க. துணைத்தலைவர் கருஜெயசூரிய



(கொழும்பு)

நாட்டின் முதன்மை பிரச்சி னையான வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பில் அர சாங்கத்தின் கொள்கை மிகவும் சிக்கலானது. தேசிய பிரச்சி னையைக் குறுகிய அரசியல் இலாபத்தின் அடிப்படையில் நோக்கக்கூடாது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் துணைத் தலைவர் கருஜெயசூரிய, சனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரைதொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசியபோது தெரிவித்தார்.

கௌரவமான சமாதானம், ஒற்றையாட்சி வரையறை ஆகிய அழகான வார்த்தைகள் மூலம் நாட்டின் தேசிய பிரச்சினையைத் தீர்க்க முடியாது. தேர்தலுக்கு முன்னர் போர்நிறுத்த உடன் படிக்கையை நீக்கப்போவதாகத் தெரி வித்தார். நோர்வே சமாதானத் தூதுவர்களை நாட்டை விட்டு விரட்டப்போவதாகவும் தெரி வித்தார்.

இவை நடைமுறைச் சாத்தியமற்ற விட யங்கள் என்பதை அரசாங்கம் தற்போது உணர்ந் துள்ளது.தேர்தலின் பின்னர் நடந்த பல சம்ப வங்களின் காரணமாக நாம் பெரும் கவலை யடைந்துள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கு இன்னல்கள், நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட் டுள்ளன. அரச நிறுவனங்களில் எமது கட்சியின் தொழிற்சங்கப்பிரதிநிதிகள், பல நெருக்கடி களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியாக எமது பொறுப்புக்களை நாம் நிறைவேற்றத்தயாராக இருக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சி குழப் பம் விளைவிக்கும் கட்சி அல்ல என்றும் அவர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ கிறிஸ்ரீனாறொக்காவிடம் வேண்டுகோள்

## - அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் நால்வர் கோரிக்கை

(கொழும்பு)

சுனாமி பொதுக்கட்டமைப்புக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்துள்ளதால் யு.எஸ்.- உதவி நிறுவனம் மற்றும் தனியாரால் வழங் கப்படும் உதவிகள் தடைப்பட்டுள் ளது. எனவே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இது தொடர்பாக மாற்று வழிகளை மிகவும் கவனமாக ஆராய்ந்து நிர்க்கதியான மக்களுக் கான உதவிகள் விரைவாகச் சென்றடைவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என அமெரிக்க காங்கிரஸ் உறு[illegible]கள் நால்வர் பிரதி இராஜாங்க[illegible]ளாளர் கிறிஸ் ரீனா றொக்காவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கையில் சுனாமியால் பாதிக் கப்பட்ட மக்களுக்கான மீள் கட்டு மானப் பணிகளில் தடைகள் உள் ளமை குறித்து எமது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தத் தடைகள் தேவையற்ற ஒன்றாகும். இது நீக்கப்படாவிட்டால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பம் தொடர்கதையாகிவிடும்.

கடந்தவருடம் சுனாமியால் அழி வுக்குள்ளான இலங்கையில் வடக்கு கிழக்கு கரையோரப் பகுதிகளை மீள் கட்டுமானம் செய்வதற்காக இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணைந்து உருவாக்கிய சுனாமிப் பொதுக்கட்டமைப்பை அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் வரவேற் றதை நாம் அறிவோம்.

எனினும் இந்தப் பொதுக்கட்ட மைப்பை இலங்கையின் உயர் நீதிமன்றம் தடை செய்தமையானது எதிர்கால செயற்பாட்டிற்கும், குந்த கத்தை ஏற்படுத்துவதுடன் குழப்பம் மற்றும் முரண்பாடுகளையும் உரு வாக்கியுள்ளது.

எனவே சுனாமியால் பாதிக் கப்பட்ட மக்களின் நன்மைக்காக அமெரிக்க இராஜாங்கத் திணைக் களம் இந்த விடயத்தை கவனமாகக் கையாண்டு மாற்று ஏற்பாடுகளை செய்து நிர்க்கதியான அந்த மக்க ளுக்கு விரைவாக உதவிகள் சென்ற டைய வழி வகை செய்ய வேண்டும்.

சுனாமி மீள் கட்டுமானம் தொடர் பாக எமது நாடு தனது பொறுப்பை நிரூபித்துக் காட்டுவதுடன் இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற் கும், விடுதலைப்புலிகளுக்குமி டையே இணைப்பை ஏற்படுத்த அனுசரணையாளர் பணியை வகிக்க வேண்டும். இது தொடர்பாக உங் களது பதிலை எதிர்பார்த்துள்ளோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரவு-செலவுத்திட்ட அறிக்கையை ஐக்கிய தேசியக்கட்சி எதிர்க்காது

சிறிலங்கா சனாதிபதி மகிந்தராஜ பக்ஷ பாராளுமன்றில் தாக்கல் செய் துள்ள வரவு-செலவுத்திட்ட அறிக் கையை ஐக்கிய தேசியக்கட்சி எதிர்த்து வாக்களிக்காது என்று அறிவித் துள்ளது. அக்கட்சியின் பாராளுமன்ற குழுக்கூட்டத்துக்குப் பின்னர் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கை யில் மகிந்தவின் வரவுசெலவுத்திட்ட அறிக்கையில் குறைபாடுகள் இருப்பினும் தமது கட்சி எதிர்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு உருவாக்கம் வாழ்க்கைச் செலவினத்தைக் குறைத்து வருவாய் அதிகரிப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை எனவும் அந்த அறிக்கை சுட்டிக்காட் டியுள்ளது. மேலும் சிறிலங்கா சனாதி பதித்தேர்தலை எதிர்த்து நீதிமன்றில் வழக்குத்தொடருவது தொடர்பாகவும் ஐ.தே.க. பாராளுமன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

# Koyo

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO

52,900.00



CF 90C
4 Gear இன் சிறப்புகள்

எங்களிடம் தாராளமாக Honda, Yamaha, Suzuki, Bajaj, Daido, Yamato மற்றும் எல்லா சீன தயாரிப்புகளுக்கு பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டிய அளவிள் கிடைக்கும்



ஏக முகவர்

மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு

DAIDO

செரெண்டிப் மோட்டர் எண்டர்பிறைஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு - 10. (சி-13408)

தொலைபேசி 01-2341580-1, 2438779, பெக்ஸ் 01-2454608 E-mail: zme@slt.lk


# சின்னப்புதுக்குளத்தில் 85 வீடுகள் பொதுமக்களிடம் கையளிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா சின்னப்புதுக்குளத்தில் மீளக்குடியமர்ந்தவர்களுக்காக நோர்வே அகதிகள் பேரவையினால் தலா இரண்டரை இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 85 வீடுகள் கையளிக்கப்பட்டன.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயல்களினால் இடம்பெயர்ந்த இக்கிராம மக்கள் 2001 ஆம் ஆண்டில் மீளக்குடியேறி தற்காலிக வீடுகளில் வசித்து வந்தனர். இவர்களை நிரந்தரமாக குடியமர்த்த நோர்வே அகதிகள் பேரவையினால் அமைக்கப்பட்ட 85 வீடுகளும், இக் கிராம மக்களிடம் கையளிக்கப்பட்டன. இக்கையளிப்பு நிகழ்வில் நோர்வே அகதிகள் பேரவையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜோன் கிறிஸ்ரென்சன், வவுனியா அரச அதிபர் சி.சண்முகம், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர். (10)

# "விபுலம்" சஞ்சிகை வெளியீட்டு விழா

(வவுனியா செய்தியாளர்)

பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரியின் வருடாந்தச் சஞ்சிகையான விபுலம் சஞ்சிகை வெளியீட்டுவிழா கடந்த புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் மு.ஜெயகரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வரவேற்புரையினை ஆசிரியர் திருமதி. ஜே.சைலஜா நிகழ்த்த, வெளியீட்டுரையினை ஆசிரியர் சு.பிரபாகர் நிகழ்த்தினார். சஞ்சிகையை அதிபர் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை திருச்செந்தூரன் அரிசி ஆலை உரிமையாளர் இராமமூர்த்தி பெற்றுக்கொண்டார். (10)

# வெட்டுப்புள்ளிகள் நவ.20 வெளியாகும்

(வவுனியா செய்தியாளர்)

கடந்த யூன் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான பல்கலைக் கழக அனுமதி வெட்டுப்புள்ளிகள் இம்மாதம் 20 ஆம் திகதி வெளி வரும் எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். பல்கலைக் கழகங்களில் 2005/2006 ஆம் கல்வி ஆண்டில் அனுமதி பெறத்தகுதியானவர்கள் இம் மாதத்தின் இறுதி வாரத்தில் நாட்டில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் அனுமதிக்கப்பட உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# கசிப்பு உற்பத்தி செய்த இருவர் பொலிசாரால் கைது

மகாறம்பைக்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒரு பெண் உட்பட இருவரை வவுனியா பொலிசார் கைது செய்துள்ளனர்.

மகாறம்பைக்குளம் பகுதியில் சிலர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவதாக வவுனியா பொலிசாருக்கு கிடைத்த தகவலையடுத்து சந்தேகத்திற்கிடமான சில வீடுகளை சோதனையிட்டபோது ஒரு பெண் வீட்டில் 45 போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலைய அதிகாரி சிறிஸ்கந்தர்ராஜா தெரிவித்துள்ளார். (10)

# செயலமர்வு ஒத்திவைப்பு

ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள வளத்துணையாளராக பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இம் மாதம் 12ஆம்,13ஆம் திகதிகளில் யாழ். கல்வியியற்கல்லூரியில் நடாத்தப்பட இருந்த ஒன்று கூடல் தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. அதே வேளை 14ஆம் திகதி யாழ் சாந்திக நிலையத்தில் நடைபெறவிருந்த உளவளத்துணை இணைப்பாளர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடலும் பிற்போடப்பட்டுள்ளது என ஜி.ரி.இசற் நிறுவன நிர்வாக அலுவலர் எஸ்.கே. சதாசிவம் தெரிவித்துள்ளார்.

# விவசாயம் சம்பந்தமான வினாவிடைப் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

முல்லை.மாவட்ட துணுக்காய் -பாண்டியன்குளம் விவசாயிகளுக்கிடையிலான விவசாயம் சம்பந்தமான வினாவிடைப்போட்டி கடந்த ஐந்தாம் திகதியன்று மல்லாவி பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

விவசாயத் திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் ந.விஜயகுமார், விவசாய போதனாசிரியர் திருமதி பு.சிவபாலன் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கிடையில் விவசாய அறிவுப்போட்டியினை நடத்தினர் போட்டி ஒழுங்குகளை விவசாய நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியம் ஆகியோர் மேற்கொண்டனர்.

நிகழ்வில் கருத்துரைகளை ஜினசேன கம்பனி சந்தைப்படுத்தல் முகாமையாளர் மஞ்சநாயக்க, வன்னிவேளாண் தொழில் நுட்ப நிறுவன பொது முகாமையாளர் புவனேஸ்வரன் ஆகியோர் வழங்கினர். வினாவிடைப் போட்டியில் வெற்றியீட்டிய விவசாயிகளுக்கான பரிசில்களை வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனப்பணிப்பாளர் வே. விக்கினேஸ்வரன் வழங்கிக்கௌரவித்தார்.

முல்லை. மாவட்ட விவசாயத்திணைக்களமும், வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனமும், துணுக்காய் பாண்டியன்குளம் கமக்கார அமைப்புக்களும் இணைந்து விவசாயிகள் மத்தியில் மேற்படி அறிவுப் போட்டியினை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கேள்வி அறிவித்தல்

## நிர்மாண வேலைகள்

01. பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா), யாழ்ப்பாணம் சார்பாக, தலைவர்,மாவட்ட கேள்விச்சபை யாழ்ப்பாணம் அவர்களால் தகுதிவாய்ந்த சகல கேள்விதாரர்களிடமிருந்து கீழ்வரும் வேலைகளுக்காக மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இல. | ஒப்பந்த குறியீட்டு இல. | ஒப்பந்த விபரம் | இக்ராட் பதிவு தரம் | கேள்வி பிணை (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01. | JF/DPDHS/UNI/02 | தாய், சேய் பராமரிப்பு, கிராமோதய சுகாதார நிலைய கட்டடத்தொகுதி நிர்மாணித்தல், ஊர்காவற்றுறை | M-5 அதற்கு மேலும் | 200,000.00 | 1,000.00 |
| 02. | JF/DPDHS/UNI/03 | தாய், சேய் பராமரிப்பு கிராமோதய சுகாதார நிலைய கட்டடத்தொகுதி நிர்மாணித்தல் தெல்லிப்பழை. | M-5 அதற்கு மேலும் | 200,000.00 | 1,000.00 |

02. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை கேள்விதாரர்களும் கொண்டிருக்க வேண்டும்.
    01. மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    02. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்க (NCCASL) உறுப்பினராகவும் M-5 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைக் கொண்டிருத்தல்வேண்டும்.
    03. ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல்வேண்டும்.
    04. முன்னைய வேலைகளில் மோசமான நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல்கூடாது
    05. ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் புத்தகத்தைக் கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக்கவேண்டும்.

    குறிப்பு கேள்விதாரருக்கு VAT சம்பந்தமாக எதுவித கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதனை கவனத்திற்கொள்ளவும்.
03. கேள்வி கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விபரங்களையும் கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நாட்களில் பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மா) யாழ்ப்பாணம் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 021-222 - 2632)
05. 12.12.2005 தொடக்கம் 10.01.2006 வரை பிற்பகல் 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத கேள்வித் தொகையான ரூபா 1,000.00பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக் களம் (மா) யாழ்ப்பாணத்தில் செலுத்தி கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
06. மூடிய கேள்விகளை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, கச்சேரி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 12.01.2006 பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும். இந்நேரம் கேள்விதாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.
07. மேற்படி கேள்வி தயாரித்தல் அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (மா),
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

கே.கணேஷ்
தலைவர்
மாவட்ட கேள்விச்சபை/அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

(சி-13490)

# தையல் கற்கைநெறிக்கான விண்ணப்பம்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 2006ஆம் ஆண்டு ஆரம்பமாக இருக்கின்ற ஒரு வருட டிப்ளோமா தையல் கற்கை நெறியில் கல்விபயில விரும்பும் பயிற்சியாளர்கள் 25.12.2005 ஆம் திகதிக்கு முன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பதிவு செய்து கொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிரதேச செயலாளர்,
புதுக்குடியிருப்பு.

(சி-13488)

# பயணிகள் போக்குவரவு ஊர்தி உரிமையாளர் கவனத்திற்கு!

***2006 ஆம் ஆண்டு பயணியர் போக்குவரவில் ஈடுபடும் ஊர்தி வழி ஒப்புதல் பெறுவதற்கான மீளாய்வு கீழ்வரும் கால ஒழுங்கில் நடைபெறும்.***

| வட்டகை | நாள் | தொடங்கும்நேரம் | முடிவுநேரம் |
|---|---|---|---|
| புதுக்குடியிருப்பு | 15.12.2005 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 16.12.2005 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 17.12.2005 | காலை 09.30 | மாலை 03.30 |
| கிளிநொச்சி | 18.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 19.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |
| மல்லாவி | 15.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 16.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |
| வெள்ளாங்குளம் | 17.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 18.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |
| தாளையடி | 20.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 21.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |

| வட்டகை | இடம் |
|---|---|
| புதுக்குடியிருப்பு | மரமடுவத்தின் அருகில் உள்ள வளாகம் |
| கிளிநொச்சி | பேருந்து நிலையம் |
| மல்லாவி | பேருந்துநிலையம் |
| வெள்ளாங்குளம் | பேருந்து நிலையம் |
| தாளையடி | பளை பேருந்து நிலையம். |

***முகாமையாளர்,***
***பயணியர் போக்குவரவு ஊர்தி,***
***வழியனுமதிப் பணியகம்,***
***புதுக்குடியிருப்பு.***

(சி.13443)

# வாடகை ஊர்தி உரிமையாளர் கவனத்திற்கு!

***2006 ஆம் ஆண்டு பயணியர் போக்குவரவில் ஈடுபடும் ஊர்தி வழி ஒப்புதல் பெறுவதற்கான மீளாய்வு கீழ்வரும் கால ஒழுங்கில் நடைபெறும்.***

| வட்டகை | நாள் | தொடங்கும்நேரம் | முடிவுநேரம் |
|---|---|---|---|
| புதுக்குடியிருப்பு | 15.12.2005 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 16.12.2005 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 17.12.2005 | காலை 09.30 | மாலை 03.30 |
| கிளிநொச்சி | 18.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 19.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |
| மல்லாவி | 15.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 16.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |
| வெள்ளாங்குளம் | 17.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 18.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |
| தாளையடி | 20.12.2005 | காலை 10.00 | மாலை 04.00 |

| வட்டகை | இடம் |
|---|---|
| புதுக்குடியிருப்பு | மரமடுவத்தின் அருகில் உள்ள வளாகம் |
| கிளிநொச்சி | பேருந்து நிலையம் |
| மல்லாவி | பேருந்துநிலையம் |
| வெள்ளாங்குளம் | பேருந்து நிலையம் |
| தாளையடி | பளை பேருந்து நிலையம். |

***முகாமையாளர்,***
***பயணியர் போக்குவரவு ஊர்தி,***
***வழியனுமதிப் பணியகம்,***
***புதுக்குடியிருப்பு.***

(சி.13444)

# காஷ்மீரில் மூன்று தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

ஜம்மு காஷ்மீர் பூஞ்ச் பகுதியில் இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் அனந்த்நாக் பகுதியில் இராணுவத்தினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது மார்வா கிராமத்தில் சந்தேகப்படும் படி நின்று கொணடிருந்த தீவிரவாதியைத் சுற்றிவளைத்தனர். அப்போது நடந்த துப்பாக்கிச் சண்டையில் அதே இடத்தில் தீவிரவாதி பலியானார். விசாரணையில் அவரது பெயர் அப்துல் வகித் என்பதும், தீவிரவாத அமைப்பான ஹஜிபுல்முஜாகிதீன்அணியைச்சேர்ந்தவர் என்பதும் தெரியவந்தது.


முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரி
செயற்படுத்தும்
பாரம்பரிய கூத்துக் கலைஞர்
லெப்.கேணல்மறவன் ஆசிரியரின்

## ஓராண்டு நினைவு நிகழ்வு

**இடம்:**-முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிகேட்போர் கூடம்

**காலம்:**-11.12.2005 ஞாயிறு மாலை2.00 மணி

**நிகழ்வுகள்:-**

01.தேசியக்கொடியேற்றல்
02.தலைமையுரை
03.நினைவுப்பேருரைகள்
04.சிறப்புரை
05.பாரம்பரிய கலைநிகழ்வுகள்.

**தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

**முல்லைமாவட்ட நுண்கலைக் கல்லூரிகள்.**

(சி.13441)



BOC
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

## பகிரங்க ஏல விற்பனை

இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.11.2004 ஆம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்ப்பாண மேற்தரக் கிளையில் மார்கழி மாதம் 10,11 ஆம் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என அறியத்தருகின்றோம்.

* யாழ்ப்பாணம் மேற்றரக்கிளை
* யாழ்.இரண்டாம் கிளை (ஸ்ரான்லி வீதி)
* பருத்தித்துறை
* மானிப்பாய்
* சுன்னாகம்
* திருநெல்வேலி.

இந்த நகைகள் மீட்கப்படவேண்டிய கடைசித் திகதி 09.12.2005 அறிவித்தலின்றி ஏலவிற்பனைத் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

(சி.13442)

**உதவிப்பொதுமுகாமையாளர், (வடபிராந்தியம்-யாழ்ப்பாணம்).**

## மக்களின்....

புதிய அரசாங்கத்தினுடைய சமாதான முயற்சிகள் தொடர்பான நிலைப்பாடுகள் பற்றியும் நோர்வே தரப்பை மீண்டும் அனுசரணைப் பணியை வழங்கும் படி சிறிலங்கா அரசு அழைத்திருப்பது பற்றிய செய்தியையும் நோர்வே தரப்பு அதிகாரபூர்வமாக எமக்குத் தெரியப் படுத்தியுள்ளது.

**கேள்வி: நோர்வே அரசு தொடர்ந்து அனுசரணைப் பணி வகிப்பதற்கு அரசு நிபந்தனைகள் விதிப்பதுபோல் தாங்களும் ஏதாவது நிபந்தனைகள் விதிப்பீர்களா?**

பதில்: எங்களைப் பொறுத்த வரையில் நோர்வேயினுடைய அனுசரணைப்பணியை நாம் எப்போதும் நிராகரிக்கவில்லை. நோர்வேயினுடைய அனுசரணைப் பணியை தொடர்ச்சியாக எமது தலைமைப்பீடம் வரவேற்றுள்ளது.

புதிதாக எந்தவொரு நிலைப்பாட்டையும் வலியுறுத்த வேண்டிய தேவை எமக்கில்லை. ஆனால் அரச தரப்புக்கு சில நிலைப்பாடுகளை தெரியப்படுத்தும்படி தெளிவுபடுத்தியுள்ளோம்.

**கேள்வி: தங்களின் அழைப்பில் தான் நோர்வே தூதர் கிளிநொச்சிக்கு வந்ததாக தெரிவித்தார். அப்படியென்ன முக்கிய விடயங்கள் இன்றைய சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது?**

பதில்: நோர்வே தூதுவரை ஏற்கனவே சந்திப்பதற்கான ஒழுங்குகள் இருந்தது. தேர்தல், ஆட்சி மாற்றங்களினால் அந்த சந்திப்பு பிற்போடப்பட்டது. தற்போதுள்ள நிலைமைகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி இன்றைய சந்திப்பில் வலியுறுத்தினோம். யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுல்படுத்துவதை விரைவுபடுத்த வேண்டும். அதற்கான சந்திப்புக்களை ஒழுங்குபடுத்தி யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுல்படுத்துவதை செயற்படுத்த வேண்டும். யுத்த நிறுத்த உடன்பாடுதான் எல்லா நடவடிக்கைகளினுடைய அடிப்படையாக அமைகிறது. அமைதி முயற்சிகளோ, சமாதான முன்னெடுப்புக்களோ எல்லாமே யுத்த நிறுத்த உடன்பாட்டில்தான் தங்கியுள்ளது.

யுத்த நிறுத்த உடன்பாடு பலவீனப்பட்டு தகர்ந்து போகும் நிலைக்கு செல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும். அண்மைக் காலத்தில் பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவம் தீவிரமான தாக்குதல்களையும், குழப்பங்களையும் அச்சுறுத்தல் களையும் தீவிரப்படுத்தி வருகிறது.

இந்தப் போக்கு தொடருமானால் மக்களின் கொந்தளிப்பை எவருமே கட்டுப்படுத்த முடியாத நிலை தோன்றும். ஆகவே இந்த யுத்த நிறுத்த உடன்பாட்டில் உள்ள நடைமுறைகளை அமுல்படுத்துவதற்குரிய உத்தரவாதங்கள் கொடுக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அப்போது தான் மக்கள் மத்தியில் நம்பிக்கைகள் கட்டியெழுப்பப்படும். மக்கள் மத்தியிலுள்ள பதற்றம், கொந்தளிப்பான சூழல் போன்ற விடயங்களை இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டியுள் ளோம். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை போன்ற இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டியுள்ளோம். அப்பாவித் தமிழ் மக்கள் மீது இராணுவமும், அதனோடு இணைந்து இயங்கும் ஆயுதக் கும்பல்களும் தொடுக்கும் தாக்குதல்களினால் மக்கள் மிகவும் ஆத்திரமுற்ற நிலையில் உள்ளார்கள்.

ஒரு கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டுள்ளது. நிலைமையை சீராக்கிக் கொள்வதற்கு ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப் பட்டு மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இராணுவ நெருக்குவாரங்கள் தணிக்கப்பட்டு இயல்பு நிலையை கொண்டுவரவும் விரைந்து எடுக்கப் படும் நடவடிக்கையூடாகவே நிலைமைகளை சீர் படுத்திக் கொள்ளலாம் என்பதை நோர்வே தூதுவர் ஊடாக அரசுக்குத் தெரியப் படுத்தியுள்ளோம்.

**கேள்வி: புதிய அரசு பதவியேற்றதன் பின்பு இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பில் கடும்போக்கைக் கைக்கொண்டு வருகிறது. நோர்வேயின் அனுசரணையாளரின் பங்குகூட கேள்விக் குறியாகவுள்ளது. இப்படியான சூழலில் தங்களின் வேண்டுகோள்?**

பதில்: எங்களைப் பொறுத்த வரையில் எமது தலைவர் அவர்கள் மாவீரர் நாள் கொள்கை விளக்க வுரையில் மிகத் தெளிவாக சுட்டிக் காட்டியிருக்கிறார். நாங்கள் மகிந்த வின் சிந்தனையிலோ அரசின் நிலைப் பாடுகளிலோ பாரிய இடைவெளி யிருந்தாலும் புதிய அரசு பதவிக்கு வந்திருக்கும் சூழலில் கால அவகாசத்தை வழங்கியிருக்கிறோம். தேர்தலுக்காக கடும்போக்கை எடுத்தார்களா கூட்டுக்களை அமைத் துக் கொண்டார்களா, உண்மையி லேயே மகிந்த ராஜபக்ஷ, தமிழ் மக்களுக்கு தீர்வினை முன்வைப்ப தற்கு மனப்பூர்வமாக விரும்புகிறாரா, அல்லது இனவாத கூட்டுகளுடன் இணைந்து கடும்போக்கைத் தான் மேற்கொள்ளப்போகின்றாரா என்பதை உறுதியாக கண்டறிய வேண்டிய ஒரு தேவையுள்ளது. அதனடிப் படையில் தான் எமது தேசியத் தலைவர் ஒரு கால அவகாசத்தை புதிய அதிபருக்கும் புதிய அரசுக்கும் வழங்கியுள்ளார். இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொண்டு தமிழ் மக்களின் அபிலாசைகளை புரிந்து கொண்டு செயற்படுவதற்கு கால அவகாசம் வழங்கியுள்ளார். இக்கால அவகாசத்தை சரியான முறையில் பயன்படுத்துவார்களா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

**கேள்வி: சமாதான முயற்சிகளிலும், போர் நிறுத்த உடன்பாட்டு விடயங்களிலும் இனி வரும் காலங்களில் தூக்கலாக இந்தியாவின் முன்னெடுப்பு தெரிகிறது. அதற்கான அறிகுறிகள் உள்ளது இது தொடர்பாக தங்களின் கருத்தென்ன?**

பதில்: அறிகுறிகளை வைத்துக் கொண்டு நாங்கள் கருத்துக்கள் கூற முடியாது. நாங்கள் மக்களின் பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகள் என்ற படி நிலையில் அறிகுறிகளையோ ஊகங்களையோ வைத்துக் கொண்டு கருத்துக்கள் கூற முடியாது. இன்று நோர்வே தூதுவர் தெரிவித்த கருத்துக்களின் படி கடந்த காலங்களைப் போலவே நோர்வேயின் அனுசரணைப் பணிக்கானதும் சமாதான முன்னெடுப்புக்களுக்கு மானதுமான பங்களிப்பையும் இந்தியா வரவேற்றுள்ளதாகவும் இந்தியா கடந்த காலங்களைப் போலவே தனது தார்மீக ஆதரவையும் தன்னுடைய ஒத்துழைப்பையும் நோர்வேக்கு வழங்குவதாக உறுதியளித்துள்ளதாக நோர்வே தூதர் இன்று எமக்குத் தெரிவித் துள்ளார்.

**கேள்வி: அரச தரப்பிடமிருந்து ஏதாவது செய்திகள் கொண்டுவரப்பட்டதா?**

பதில்: சிறிலங்கா அரசாங்கம் தமக்கு அனுசரணைப்பணியை தொடரும் படி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது என்பதையும் நேரடியாகவே மகிந்தராஜபக்ஷ அழைத்து தன்னிடம் அதனைத் தெரிவித்திருப்பதாகவும் நோர்வே தூதுவர் அதிகாரபூர்வமாக எமக்கு இன்று தெரிவித்தார்.

**கேள்வி: தாங்கள் ஏதாவது பதிலை அளித்துள்ளீர்களா?**

பதில்: எம்மைப் பொறுத்த வரையில் பதில் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. நோர்வேயின் அனுசரணைப் பணியும் கண்காணிப்புப்பணியும் ஏற்கனவே இங்கு தொடர்ந்த வண்ணம் உள்ளது.

தெற்கிலேதான் அதற்கான குழப்பம் ஏற்பட்டுள்ளது. அரசு மாறியிருக்கிறது. இங்கே எவ்விதமான குழப்பமான சூழல் நிலையில்லை.

**கேள்வி: கண்காணிப்பு பணியிலிருந்து நோர்வேயை விலக்குவதற்கு முடிவெடுத் திருப்பதாக தகவல்கள் தெரிவிக் கின்றன. இது தொடர்பான தகவல்கள் ஏதாவது தங்களுக்கு தெரிவிக்கப்பட்டதா?**

பதில்: அப்படியான செய்திகள் எதையும் நோர்வேத் தரப்பு எங்களுக்கு தெரிவிக்கவில்லை.

**கேள்வி: மகிந்த ராஜபக்ஷ ஒற்றையாட்சி முறையில் தான் தீர்வு எனறு பாராளுமன்றத்தில் பிரகடனப படுத்தியுள்ளார். பேச்சு வார்த்தைக்கு மகிந்த தனது நிலைப் பாட்டில் வந்தால் பேசுவீர்களா?**

பதில்: தலைவரின் மாவீரர் நாள் உரையில் இக் கேள்விக்கான பதில் உள்ளது. அதாவது தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன அபிலாசை என்ன என்பதை தலைவர் தெளிவாக விளக்கியுள்ளார். அதாவது ஒற்றையாட்சியையோ அல்லது தற்போது ஏற்பட்டிருக்கின்ற கூட்டுக்களின் கடும்போக்கையோ ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களோ தமிழ் மக்களின் தலைமையோ பேச்சுக்கு போவார்கள் என்று எவருமே எதிர்பார்க்கமுடியாது. தற்போது அரசாங்கம் அனுசரணையாளர்கள் ஊடாக எதுவித நிலைப்பாட்டையும் முன்வைக்காத காரணத்தால் நாம் எதுவித கருத்தையும் கூறமுடியாது. அப்படியான சூழல் எழும்பொழுது அனுசரணையாளர்களூடாக நாம் எமது நிலைப்பாட்டை ஆணித்தரமாக வெளிப்படுத்துவோம்.

**கேள்வி: நோர்வே அனுசரணையாளர் பணி தொடருமாக இருந்தால் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து பேச்சுவார்த்தை ஆரம்பிக்குமா? அல்லது புதிதாக ஆரம்பிக்குமா?**

பதில்: நோர்வேயின் உயர் மட்ட தூதுக்குழுவினர் மிகவிரைவில் எமது தலைமைப் பீடத்தைச் சந்திக்கவுள்ளனர். அப்போதுதான் அது பற்றி விவாதித்து எங்களுடைய கருத்துக் களை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும். இன்று நாம் அதைப்பற்றி எதுவும் பேசவில்லை. சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றியும் அதிகாரபூர்வமாக தெளிவுபடுத்தும் நோக்குடன் தான் நோர்வே தூதுவரின் பயணம் அமைந்திருந்தது.

**கேள்வி: போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அரசும், விடுதலைப்புலிகளின் உயர்மட்ட தலைமைகள் சந்திக்க கூடிய வாய்ப்புக்கள் உள்ளனவா?**

பதில்: சந்திப்புக்களின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளோம். தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளோம். இன்றும் சந்திப்புக்களின் அவசியத்தை கூடுதலாக வலியுறுத் தியுள்ளோம். ஏனெனில் யுத்த நிறுத்த உடன்பாடு சூழல் தகர்ந்து போகும் ஆபத்து மிக நெருக்கமாகிக்கொண்டு இருக்கின்றது. அண்மைக் காலத்தில் இராணுவ நெருக்குவாரங்கள் தாக்குதல்கள், பொதுமக்கள் கொல்லப் படுத்தல், பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான மோதல் உக்கிரமடைந்து கொண்டிருக்கின்றது. ஆகவே உடனடியாக விரைவாக இரண்டு தரப்பு உயர் மட்டக் குழுவும் சந்தித்து யுத்த நிறுத்த உடன்பாட்டை பலப்படுத்துவதற்கும் அமுலாக்குவதற்கும் முயற்சிகளில் தீவிரமாக இறங்கவேண்டும் என்பதையும் இன்றைய சந்திப்பில் வலியுறுத் தியுள்ளோம்.இருதரப்பும் சந்திக்க வேண்டும் என்பதை நோர்வேத் தூதுவரும் வலியுறுத்தியுள்ளார்.

**கேள்வி: புதிய அரசாங்கத் திடம் அவ்வாறான சந்திப்புக் களை ஏற்படுத்தக் கூடிய அறிகுறிகள் ஏதும் உள்ளதா?**

பதில்:அதை அனுசரணையாளர்களிடம் தான் கேட்கவேண்டும். ஏனெனில் எங்களுடைய நிலைப்பாட்டை தெளிவாகவும் ஆணித்தரமாகவும் தெரிவித்திருக்கின்றோம். யுத்த நிறுத்த அமுலாக்கம் தொடர்பாக இரு தரப்பு உயர்மட்டக் குழுவும் கலந்துரையாடி யுத்த நிறுத்த அமுலாக்கத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும். இது மிக மிக அவசியமானதாகும். தற்போதுள்ள சூழலை தக்க வைக்க வேண்டுமாக இருந்தால் உடனடியாக இரு தரப்பு சந்திப்பையும் நடத்த வேண்டும் என்பதை எமது தலைமைப்பீடம் சார்பாக வலியுறுத்தியுள்ளோம்.

**கேள்வி: இழுத்தடிப்புக்கள், போக்குக்கள் கடைப்பிடிக்கப்படு கின்றன. அது தொடர்ந்தால் தலைவரின் செய்திப்படி குறுகிய காலம் என்பது?**

பதில்: மாவீரர் நாள் செய்தியில் தலைவர் தெளிவுபடுத்தியுள்ளார். கால அவகாசத்தை தீர்மானிக்க வேண்டியவர்கள் சிறிலங்கா அரசும் படைத்தரப்பும் தான். நிலைமைகளைச் சீர்கெடுத்து நிலைமைகளை இழுத்தடித்துச் சிக்கல்களை உருவாக்குவது என்பது எல்லாம் அரசின் கையில்தான் உள்ளது. அரசு ஒரு தீர்க்கமான முடிவை விரைவில் எடுத்து சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த வேண்டும் என்பதுதான் மக்களுடையதும் எங்களுடையதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

**கேள்வி: யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் நடமாட்டம். அதிகரித்துள்ளது இது தொடர்பாக?**

பதில்: இது விடயம் தொடர்பாகத்தான் நோர்வே தூதரிடம் நீண்ட நேரம் கலந்துரையாடினோம். யாழ்ப்பாணத்திலும் தமிழீழத்தின் ஏனைய பகுதிகளிலும் இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகமாகியுள்ளதுடன் மக்கள் மீதான நெருக்குவாரங்கள் அதிகரித்துள்ளதைப் பற்றியும் கொலை அச்சுறுத்தல்கள், கொலைகள் நடைபெறுகின்ற சம்பவங்களையும் எடுத்து விளக்கியுள்ளோம். அப்பாவி பொதுமக்கள் எவ்வித காரணமின்றி சுட்டுக்கொல்லப்படுவதும் தாக்கப்படுவதும் அச்சுறுத்தப் படுவதும் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. இதன் ஒரு வெளிப்பாடாகத் தான் இராணுவத்தினருக்கும் மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை அதிகரித்துள்ளது.

இந்நிலைமை முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டுமானால் யுத்த நிறுத்த அமுலாக்கத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. யுத்த நிறுத்த அமுலாக்கத்தை கொண்டு வருவதன் மூலம் நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம். இராணுவத் தினருடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுவைச் சேர்ந்த இருவர் எம்மிடம் சரணடைந்ததையடுத்து இருவரது குடும்பதைச் சேர்ந்தவர்களை மிகக் கொடூரமான முறையில் பழிவாங்கியுள்ளார்கள். இக் கொலைகளின் பின்னணியில் சிறிலங்கா இராணுவமும் ஆயுதக்குழுவும் உள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது. இது மக்கள் மத்தியில் கொந்தளிப்பை உருவாக்கியுள்ளது. இந்நிலைமைகள் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்பதை இன்றைய சந்திப்பில் மிக ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளோம்.

**கேள்வி: யாழ்ப்பாண அரசியல்துறைப் பொறுப் பாளருடன் நடைபெற இருந்த சந்திப்பு சிறிலங்காவின் சமாதானச் செயலகம் அனுமதி வழங்காததால் இடம்பெற வில்லையென கூறப்பட்டது. இது தொடர்பாக?**

பதில்: யாழ்ப்பாணத்திலே முறுகல் நிலையேற்பட்டு நிலைமைகள் தீவிரமடைந்த நிலையில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இராணுவத்தின் தலைமைகளை சந்திப்பதற்கு எமது தலைமைப் பீடம் அதற்கான ஒழுங்குகளை செய்த நிலையில் இராணுவத்தினர் அதனை உதாசீனம் செய்து தட்டிக் கழித்திருக்கிறார்கள்.நோர்வே தரப்பு அடிக்கடி கூறுவதுபோல் இரு தரப்பும் சந்திக்க வேண்டும் என்ற நிலைப்பாடு தட்டிக்கழிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எமது கவலையையும் தெரிவிப்பதுடன் எமது நிலைப்பாட்டையும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

**கேள்வி: போர் நிறுத்த உடன்பாட்டில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்பது அரசின் நிலைப்பாடாக உள்ளது. விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு என்ன?**

பதில்: அதிகாரபூர்வமாக நோர்வே ஊடாக எமக்கு அரசினால் எதுவும் அனுப்பப்படவில்லை. ஊடகங்களில் தான் அந்த செய்தியை கேள்விப்படுகின்றோம். யுத்த நிறுத்த உடன்பாடு என்பது நீண்ட கால முயற்சிக்கூடாக கொண்டு வரப்பட்ட நடைமுறைச் சாத்தியமான ஒரு உடன்பாடாகும். இதில் மாற்றங்களை ஏற்படுத்துவது என்பது எந்த விதத்திலும் சாத்தியமற்றது. யுத்த நிறுத்த உடன்பாட்டை மாற்றி அமைப்பது என்பதை விட யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுலாக்கம் செய்வது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. சர்வதேச சமூகமும் நோர்வே தரப்பும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார்கள். அரச தரப்பிடம் இருந்து வருகின்ற எதிர்மறையான கருத்துக்கள் எந்தவிதத்திலும் நடைமுறை சாத்தியமற்றது. அதிகாரபூர்வமான கருத்தா என்பதை உறுதிப் படுத்த முடியவில்லை.

**கேள்வி: போர் நிறுத்த உடன் பாட்டில் மாற்றம் ஒன்றை விரும்புகின்றார்களா?**

பதில்: யுத்த நிறுத்த உடன்படிக் கையை மாற்றி அமைப்பது என்பதை விடுதலைப் புலிகள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். விரும்பவும் மாட்டார்கள்.

### சிந்தனைக்கு



மலைபோல் மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும்வரை, எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 10.12.2005

தொலை பேசி 060-2213244
தொலை நகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ vahoo.com


## தேவையின் நிமித்தம்!

நோர்வே அரசை அனுசரணையாளராகப் பணியாற்றுமாறு சிறிலங்காவின் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தியோக பூர்வ அழைப்பொன்றை விடுத்துள்ளார். நோர்வே அரசும் சில நிபந்தனைகளுடன் கூடிய சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்படுவதற்கு தனது சம்மதத்தை வெளியிட்டுள்ளது.

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நோர்வேயிடம் இத்தகையதொரு அழைப்பை விடுவார் எனப் பலர் எதிர்பார்த்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அவரும் அவரது கூட்டணியினரும் தேர்தல் பிரசாரத்திற்கு முன்பிருந்தே நோர்வே அரசின் சமாதான முயற்சிகளுக்கு எதிராகக் கடும் கண்டனத்தை தெரிவித்து வந்ததோடு தாம் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தால் நோர்வே வெளியேற்றப்படும் எனவும் தெரிவித்து வந்தனர்.

மகிந்த ராஜபக்ஷவினதும், அவரது கூட்டணியினரதும் வைராக்கியம் சுமார் 15நாட்கள் வரையிலேயே நீடிக்க முடிந்தது. அதாவது பதவி ஏற்று இரண்டு வாரங்களுக்குள் நோர்வேயை மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாட்டாளராக பணியாற்றுமாறு மகிந்த ராஜபக்ஷவால் அழைப்பு விடுக்கும் நிலை உருவாகியுள்ளது.

இதே சமயம் மகிந்த ராஜபக்ஷவினால் அழைப்பு விடுக்கப்பட்டு மூன்று நாட்கள் கடந்த நிலையிலும், நோர்வே அரசை அழைத்ததையிட்டு ஜே.வி.பி தனது ஆட்சேபம் எதையும் வெளியிடவில்லை. மாறாக நோர்வேயை அழைத்தமைக்கு நொண்டிச் சாட்டுக்கள் கூறுவதற்கு அது முற்பட்டுள்ளது.

குறிப்பாக மகிந்தவின் சிந்தனைக்கேற்ப சமாதான ஏற்பாட்டாளராக நோர்வே செயற்படுவதற்கு ஜே.வி.பி தடையல்ல என்பது போன்ற கருத்துக்களை அது முன்வைக்கத் தொடங்கியுள்ளது. இது அடிப்படையில் கேலிக்கிடமானது ஏனெனில் மகிந்தவின் சிந்தனையை நோர்வே வரித்துக் கொண்டதாகவோ அதன் அடிப்படையில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கப்படும் என நோர்வே உத்தரவாதம் எதையும் வழங்கியதாகவோ நாம் அறியவில்லை.

ஆனால் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும், ஆட்சியில் இருப்பவர்களுக்கு எதிராக கூக்குரல் இடுவதற்கும், சிங்கள அரசியல் தலைவர்கள் எதையும் கூறுவதற்கும் செய்வதற்கும் தயங்குவதில்லை என்பது வரலாற்றுப் பாடம். ஏனெனில் சிங்கள மக்களின் ஞாபக சக்தி குறித்தும், சிங்கள மக்களை ஏமாற்றி விடலாம் என்ற நம்பிக்கையையும் அவர்களுக்கு நிரம்பவே உண்டு.

அவ்வாறு இல்லாது விட்டால் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்பாட்டை வன்மையாக எதிர்த்ததோடு ரணில் விக்கிரமசிங்க அரசசாங்கத்தை கவிழ்த்த முன்னாள் சனாதிபதி சந்திரிகா பின்னர் யுத்த நிறுத்த உடன்பாட்டைப் பேணியதோடு அவ் உடன்பாட்டைப் பாராட்டவும் எவ்வாறு முடிந்திருக்கும்?

ஆனால் உண்மையில் இவ் உடன்பாடுகள் யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாகும். இவ் உடன்பாட்டில் குறைபாடு உள்ளதென்பது தவறாகும். இதே போன்று இவ் உடன்பாட்டை இலகுவில் மாற்றியமைத்தல் என்பது சாத்தியப்பாடானதல்ல. ஏனெனில் இவ் உடன்பாட்டை மாற்றி அமைத்தல் என்பது மீண்டும் யுத்தத்திற்குச் செல்வதென்பதே அர்த்தமாகும்.

இவற்றிற்கும் அப்பால் இவ் உடன்பாட்டுடன் நோர்வே நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளது. நோர்வே அரசை வெளியேற்றி விட்டு இவ் உடன்பாட்டை அமுல் செய்வதென்பது சாத்தியப்பாடானதல்ல. ஒரு வகையில் யுத்த நிறுத்தத்தை மாற்றியமைத்தல் என்பது எவ்வாறு யுத்தத்திற்குச் செல்வதென்பதாகுமோ அதே போன்று நோர்வே அரசை வெளியேற்றுதல் என்பதும் ஒரு வகையில் அதை ஒத்ததாகவே இருக்கும்.

ஆகையினால் யுத்த நிறுத்தத்திற்கு எதிராகப் பேசுபவர்களும், நோர்வேக்கு எதிராகப் பேசுகின்றவர்கள் யுத்தத்திற்குத் தயாராகாத வரையில் யுத்த நிறுத்த உடன்பாட்டை முறித்துக் கொள்ளப் போவதில்லை. ஆனால் அதற்காக அவர்கள் யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுல் செய்யப்போவதோ அன்றி அதற்கு விசுவாசமாக நடந்து கொள்ளப்போவதோ இல்லை. கடந்தகால நிகழ்வுகள் இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளத்தக்கவையாகும்.

எடுத்துக்காட்டாக, நோர்வேயைச் சமாதான முயற்சிகளில் ஏற்பாட்டாளராகப் பங்களிக்குமாறு, அழைத்த சந்திரிகா குமாரதுங்க, சமாதான முயற்சியில் எந்தவித முன்னேற்றத்தையும் காணவில்லை. 1999 இல் ஏற்பட்ட பாரிய இராணுவப் பின்னடைவை அடுத்து நோர்வேயை ஏற்பாட்டாளராக அழைத்தனர் என்பதே உண்மையாகும்.

அதுமட்டுமன்றி யுத்த நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்ட ரணில் விக்கிரமசிங்கவும் சரி, அதன் பின்னர் யுத்த நிறுத்த உடன்பாட்டை தொடர்வதாக அறிவித்த சந்திரிகா குமாரதுங்கவும் சரி தற்பொழுது யுத்தநிறுத்த உடன்பாட்டை மாற்றி அமைக்கப் போவதாகக் கூறும் மகிந்த ராஜபக்ஷவும் சரி யுத்தநிறுத்த உடன்பாட்டிலும், சமாதான முயற்சிகளிலும் காட்டிய / காட்டும் கரிசனையைவிட இராணுவத் தீர்வில் காட்டிய / காட்டும் கரிசனை அதிகமாகும்.

அவர்கள் தமக்கு வாய்ப்பான சூழ்நிலை வரும் வரையில் காத்திருக்கின்றனர் என்பதே உண்மை. ஏனெனில் அவர்களின் சிந்தனை அவர்களின் கூட்டாளிகளின் நோக்கங்கள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதையோ சமாதான வழியில் தீர்வு என்பதையோ கொண்டதாக இல்லை. சிறப்பாகக் கூறுவதானால் ஒற்றையாட்சிமுறைக்குள் தீர்வென்னும் மகிந்தவின் சிந்தனைக்குள் எவ்வாறு இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண முடியும்.?

## டிசம்பர் பத்தாம் நாளில் பரிசீலனைக்கு எடுக்கவேண்டிய ஒரு பரிந்துரை

ஓடிவருகின்றன
உயர்ந்த முகடுகளிலிருந்து நதிகள்
எங்கள் கால்நனைப்பதாய் கூறி.

கண்டங்களைக் கடந்தும்
சமுத்திரங்களைத் தாண்டியும்
காற்று வருகிறது
எங்கள் சுவாசத்துக்கானதெனச் சொல்லி.

எமக்கான சகலதுமே இறக்குமதியாகின்றன
மனித உரிமைகளுக்கான விதிகள் அடங்கலாக.
எறும்புகளின் ஊர்வலங்களின்போது
கால்மிதியாது கடப்பது எப்படியென்று
விதிகளும்

காலுறைகளும்
பூசும் களிம்புகளும்கூடத் தருவிக்கப்படுகின்றன.
கோழி அறுக்கும்போதில்
கத்தியை எப்படிக் கையாள்வதென்றும்

எலிகளை வலியில்லாமல்
எப்படி மடக்கலாமெனவும்

கடிக்கவரும் வெறிநாய்களை மயக்கி
எப்படி முத்தமிடலாமென்றும்
நுளம்புகளுடன் இசைந்து வாழ்தல் எங்ஙனமெனவும்

எல்லாவற்றுக்கும் போலவே
வெள்ளைக்காரரே இதற்கும் விரிவுரை
செய்கின்றனர்.திரைமூடிய ஜன்னல்களுக்குள்ளே

குளிரூட்டப்பட்ட அறைகளுக்குள்ளிருந்து

செய்வினைகள்
செயற்பாட்டு அறிக்கைகள்
சுவரொட்டிகள்
விலைகொடுத்து வாங்கிய வீதிநாடகங்கள்

வருடத்தில் விழாவுக்கான ஒருநாளாகிய
'டிசம்பர்10' என

எங்கும் படர்ந்தழுத்தும் காற்றமுக்கம்
எங்கள்மீது இப்போது.

இடிக்கவரும் குழுமாட்டை அடித்தல்
எப்படிக் குற்றமாகும்?

கடிக்கவரும் நாய்க்கு கல்லெடுத்தெறிந்தால்
கண்டனம் எறிந்தவர் மீதா?

புரியவில்லையே அவர்கள் சூத்திரம்.

பிரசவத்தில் இரத்தம் சிந்துவது
உயிரொன்றின் மீட்புக்கானதென
எப்படிப் புரியாமற்போகும் அவர்களுக்கு?

எது எப்படியோ

'உயிர்மீதான உரிமைகள் பேணப்பட வேண்டியதே'
எனும்
குரல்கள்மீது எமக்குக் கோபமில்லை.
ஆயினும்
வெறும் வெளிகளில் கலந்து கரையாமல்

எல்லோர் செவிக்குள்ளும்

அதிகார அறைகளுக்குள்ளும்

எல்லா இதயச்சுவர்களையும் கீறி நுழையட்டும்.

பாவப்பட்டு அழும் மக்களின் பக்கமான
பரிந்துரைகளாக
நற்செய்திகளாக

எல்லைமீறிப் பயணிக்கட்டும் இந்தக்
குரல்கள்.

**இன்று சர்வதேச மனித உரிமைகள் நாள்**

புதுவை இரத்தினதுரை

## சந்திரிகாவுக்கு கிடைக்கும் வசதி வாய்ப்புக்களை வலுவற்றதாக்க நீதிமன்றில் மனுத்தாக்கல்

முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வசதிகளை செய்து கொடுக்க அமைச்சரவை எடுத்துள்ள தீர்மானத்தை வலுவற்றதாக்ககோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் தாக்கல் செய்துள்ளார்.இந்த மனுவில் பிரதிவாதிகளாக பிரதமர் உட்பட அமைச்சரவையும் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற சனாதிபதி ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய வரப்பிரசாதங்கள் அது தொடர்பான சட்ட மூலத்தில் கூறப்பட்டுள்ளதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்ட மூலத்திற்கு அமைய முன்னாள் சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள ஊழியர்கள் மற்றும் வாகனங்கள் என்பன சட்டத்திற்கு முரணானது எனவும் விக்டர் ஐவனின் இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாய்மார்களின் குற்றச் செயல்களுக்காக 200 குழந்தைகளுக்கும் சிறைவாசம்!

(கொழும்பு)

நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் அல்லது சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டு அடைக்கப்பட்டுள்ள தாய்மாரோடு சிறைகளில் இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 200 வரையில் உள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதுவரை வெலிக்கடைச்சிறைச் சாலையில் மாத்திரம் இவ்வாறு தாய்மாரோடு, சிறைப்படுத்தப்பட்டுள்ள 32 குழந்தைகள் உள்ளனவென்று தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான தாய்மார்கள் போதைப்பொருள் பரிமாற்றல் மற்றும் போதைப்பொருள் விற்பனை தொடர்பாகவே சிறைப் படுத்தப்பட்டுள்ளனர் எனவும், சிறைச் சாலைகளுக்குள் அக்குழந்தைகளின் உளநல மற்றும் உடல்நல விருத்தியை மேற்கொள்வதோ, அன்றி முழுமையான போசாக்கினை வழங்குவதோ சாத்தியமற்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைக்குழந்தைகளுடன் சிறை சென்றுள்ள தாய்மார்கள் ஒருபுறமிருக்க, கர்ப்பிணிகளாக சிறை செல்லும் பெண்கள் சிறையிலேயே குழந்தைகளை பிரசவிக்கும் சம்பவங்களும் நடந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குழந்தை ஒன்று தனது ஐந்து வயதினை அடையும் வரையிலும் தாயின் பராமரிப்பில் வளரவேண்டியுள்ளதனால் சிறைத்தண்டனை பெறும் தாய்மாரிடம் இருந்து குழந்தைகளை அப்புறப்படுத்த முடியாதுள்ள தெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சரத்பொன்சேகாவின் வங்கிக் கணக்கில் ரூபா 29 இலட்சம் மோசடி செய்தவர் கைது!

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் புதிய தளபதியின் பெயரில் இருக்கும் வங்கிக் கணக்கிலிருந்து போலி ஆவணங்களைப் பயன்படுத்தி 29 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்ததாக இராணுவத்தின் சிவில் லிகிதரான தஸநாயக்க முதியன்சலாகே சமன் குமார தஸநாயக்க என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள தஸநாயக்க முதியன்சலாகே சமன் குமார தஸநாயக்க, எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர் தஸநாயக்க முதியன் சலாகே சமன் குமார தஸநாயக்க.

இராணுவத் தலைமையகத்தின நிதி இயக்குநரால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து விசாரணைகளை நடத்திய கொழும்பு விசேட மோசடி விசாரணைப் பிரிவு சந்தேக நபரை கைது செய்தனர்.

இராணுவத் தலைமையகத்தின் நிதிப்பிரிவில் லிகிதராகப் பணியாற்றிய இவர் இராணுவத்தளபதியின் பெயருக்குக் கிடைக்கும் பணத்தை வங்கியில் வைப்பீடு செய்யும் கடமைக்குப் பொறுப்பாக இருந்துள்ளார்.

நிதி வைப்பீடு செய்துள்ளதாக அவர் சமர்ப்பித்திருந்த ஆவணங்கள் கணக்காய்வின்போது போலியானவை என கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரு சகோதரிகளின் படுகொலையைக் கண்டித்து கொக்கட்டிச் சோலையில் மக்கள் பேரணி

## இறுதிவணக்க நிகழ்வும் நடைபெற்றது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இரு சகோதரிகள் சிறிலங்கா இராணுவ துணை ஆயுதக் குழுவினரால் குண்டுவீசி கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை மக்கள் நேற்றுக் கண்டனப் பேரணி யொன்றை நடத்தியுள்ளனர்.

இக்கண்டன எதிர்ப்புப் பேரணியை மட்டக்களப்பு பெண்கள் மேம்பாட்டுப் பாதுகாப்பு அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இப் பேரணியில் பொது அமைப்புக்களின், பிரதிநிதிகள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள்,மாணவர்கள், பொதுமக்கள் என நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். இதன் போது வர்த்தக நிலையங்கள் பூட்டபபட்டிருந்ததுடன் ,கொக்கட்டிச் சோலை, கன்னங்குடா, வவுணதீவு, பட்டிப்பளை, போன்ற இடங்களினூடான போக்குவரத்தும்தடைப்பட்டிருந்தது. .

கொக்கட்டிச் சோலை ஈழநாதம் பணிமனையின் முன்பாக தொடங்கிய பேரணி பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் முடிவடைந்ததுடன் கண்டன அறிக்கையும் வாசிக்கப்பட்டது.

தொடர்ந்து கண்டனப் பேரணியில் ஈடுபட்டவர்கள் மனித உரிமை அமைப்பினருக்கான அறிக்கையைப் பட்டிப்பளைப் பிரதேச செயலரிடம் கையளித்தனர்.

இதேவேளை மட்டக்களப்பில் இராணுவ துணைஆயுதக்குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட புகழ்வேந்தனின் சகோதரிகளின் வணக்க நிகழ்வுகள் நேற்று மாலை 4.00மணியளவல் இலுப்படிச்சேனை அரசினர் தமிழ்க கலவன் பாடசாலையில் இடம் பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து இலுப்படிச்சேனையில் நாட்டுப்பற்றாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட பிரத்தியேக இடத்தில் இவர்களது உடல்கள் விதைக்கப்பட்டுள்ளன.

# நாகை-வேதாரணியம் இடையில் பனூஸ் சூறாவளி கடக்கலாம்

## -தமிழ்நாட்டில் வெள்ள அபாயம்

வங்கக் கடலில் உருவாகி உள்ள "பனூஸ்" புயல் தமிழக கடலோரத்தை அண்மித்துவரத் தொடங்கியுள்ளது.

இதன் காரணமாக தமிழ் நாட்டின் கடலோர மாவட்டங்களில் நேற்றுக் காலை முதல் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியுள்ளது.

பனூஸ் புயல்நேற்று சென்னைக்கு கிழக்கு, தென் கிழக்கு திசையில் 650 கி.மீ தொலைவில் வங்கக்கடலில் மையம் கொண்டிருந்தது. கடந்த புதன் இரவு முதல் வியாழன் மதியம் 2.30 மணிவரை இத்தீவிர தாழ முக்கமையம் நகராமல் அதே இடத்தில் நிலைகொண்டிருந்தது.

நேற்று முன்தினம் பிற்பகல் பனூஸ் நகரத் தொடங்கியது. நேற்றுக் காலை மேலும் தீவிரம் அடைந்து சற்றுத் திசை மாறி நகர்ந்தது. தற்போது அது நாகைக்குக் கிழக்கே 350 கி.மீ. தொலைவில் உள்ளது. தமிழக கடலோர பகுதிகளைக் குறிப்பாக வேதாரணியத்திற்கும்-நாகைக்கும் இடையே கடக்கும் வகையில் அந்தப் புயல் நகர்ந்து வருகிறது.

புயல்வேகமாக நகர்ந்து வருவதால் காற்று வீசத் தொடங்கி இருக்கிறது. மணிக்கு 70 கி.மீ. மேல்வேகத்தில் காற்று வீச வாய்ப்புள்ளது. பலத்த காற்றுக் காரணமாக தமிழகக் கடலோரப் பகுதிகளில் அலைகள் சீற்றமாகக் காணப்படு கின்றன.

பனூஸ் புயல் மேலும் தீவிரமாகி இன்று 100 முதல் 200 கி.மீ தொலைவுக்குள் வந்துவிடும். அத்தகைய சூழ் நிலையில்சென்னை உள்ளிட்ட தமிழகக் கடலோர மாவட்டங்களில் மிகப் பலத்த அடைமழை பெய்யும் எனறு எச்சரிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.

பனூஸ் புயல் 300 கி.மீ தொலைவுக்குள் வந்துவிட்டதால் அது எங்கே, எப்போது கரையைக் கடக்கும் என்பதை அதிகாரிகள் உறுதி செய்தனர். அதன்படி பனூஸ் புயல் இன்று பிற்பகல் வேதாரணியத்திற்கும், நாக பட்டிணதுக்கும் இடையே கரையைக் கடக்கும் போது வட மாவட்டங்கள் மீண்டும் வெள்ளக் காடாகி விடும் இந்த அபாயத்தை எதிர்நோக்கி உள்ள அதிகாரிகள் அனைத்துப்பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்து தயார் நிலையிலுள்ளனர் .

### ஒற்றுமை...

வலியுறுத்த விரும்புகின்றேன் என அரசியல் துறைப் பொறுபபாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியிலுள்ள சமாதானச் செயலகத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசிய போதே இதனை அவர் தெரிவித்தார். மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலைப் பகுதியில் இடம் பெற்று வரும் தமிழ், முஸ்லீம் மக்கள் இடையிலான வன்முறைகள் தொடர்பாகவும் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கு மட்டக்களப்பு முஸ்லீம் மக்கள் விடுத்துள்ள கோரிக்கைகள் தொடர்பாகவும் யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற வேண்டும் என்றும் வெளியாகியுள்ள தகவல்களுக்கும் பதில் அளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தனது பதிலில்

தற்பொழுது தமிழ்,முஸ்லிம் மக்கள் மத்தியிலான உறவுநிலையை சீர்குலைப்பதற்கான பாரிய சதி நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இதனைத்தான் இந்தச்சம்பவங்களின் மூலம் உணரமுடிகிறது. ஆகவே இவற்றை முறியடிக்கக் கொண்டு வந்து தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் நல்லுறவை கட்டியெழுப்ப வேண்டும் என்பதுதான் எமது தலைமைப்பீடத்தின் விருப்பமாகவுள்ளது. அண்மை நாட்களில் முஸ்லிம் சம்மேளனம் தலைவருக்கு ஒரு வேண்டுகோளை அனுப்பியிருந்தது அதனை எங்கள் தலைவர் கவனத்தில் எடுத்து எமது மாவட்ட அரசியல் இராணுவத்தலைமைகளுக்கு ஒரு பணிப்பை விடுத்திருக்கிறார். அதன்படி உடனடியாக முஸ்லிம் தூதுக் குழுக்களையும் மக்களையும் சந்தித்து உறவுநிலையை இறுக்கமாக்கவும் சதியின் பின்னணியை இனங்காண்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து தீவிரமாக செயற்படும்படியும் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கான உத்தரவுகள், பணிப்புக்கள் எங்கள் மாவட்ட அரசியல், இராணுவத்தலைமைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் அதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் உண்மையில் முஸ்லிம் மக்கள் மத்தியில் பதற்றத்தை- குழப்பத்தை உருவாக்கி தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் விரிசலை உருவாக்கி இதன் மூலம் நன்மை தேடுவதற்கு பல சக்திகள் முனைந்து கொண்டிருக்கின்றன.

இதனால் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் ஒரு வேண்டுகோளை எமது தலைமைப்பீடத்தின் சார்பில் விடுக்க விரும்புகிறோம். அவசரப்பட்டு. உணர்ச்சிவசப்பட்டு இந்த சதிநடவடிக்கைக்கு யாரும் பலியாகி விடக் கூடாது. நிதானமாகவும் பொறுமையாகவும் உண்மை நிலைகளைக் கண்டறிந்து இந்த சூத்திரதாரிகளைக் கண்டறிந்து அவர்களுக்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளைப் பற்றி தீர்மானிப்பதற்கு கால அவகாசம் இருதரப்புக்கும் தேவை. முஸ்லிம் பிரதிநிதிகளை சந்தித்து நிலைமைகளை தெளிவுபடுத்தி சுமுகமான நிலையை ஏற்படுத்துமாறு எமது மாவட்ட தலைமைகளுக்கு அறிவித்திருக்கிறோம்.

இப்பொழுது தமிழீழப் பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளுக்குள்ளும் வாழ்கின்ற முஸ்லிம் மக்களுக்கும் அநாமதேய மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருகின்றது. இதை முஸ்லிம் மக்கள் எந்த வகையிலும் பொருட்படுத்தத் தேவையில்லை. இது திட்டமிட்டமுறையில் மேற்கொள்ளப்படும் ஒரு சதிச்செயல். தமிழ், முஸ்லிம் மக்கள் தாயகத்தில் சுதந்திரமாக நிம்மதியாக, கௌரவமாக ஒருமைப்பாட்டுடன் வாழ்கின்ற சூழலை உருவாக்குவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளும் அதன் தலைமையும் அர்ப்பணிப்புடன் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த வகையில் முஸ்லிம் மக்கள் எந்தவித பதற்றமும் அடையத் தேவையில்லை. அதேபோல தமிழ் மக்களும் எந்தவித முரண்பாடும் குரோத உணர்வும் வராமல் தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் நல்லுறவை கட்டி எழுப்ப அனைத்துதரப்பும். அர்ப்பணிப்புடன் பாடுபடவேண்டும் இதனை எமது தலைமைப்பீடத்தின் சார்பாக நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

யாழ். மாவட்டம் உட்பட முஸ்லிம் மக்களுக்கான மிரட்டல்கள் விடுக்கப்படுவதாக நாங்கள் கேள்விப்படுகிறோம். இந்தச் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதன் சூத்திரதாரிகளை இனங்காண்பதற்கு முழுஅளவில் செயற்பட்டு வருகின்றோம். முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் எமது மாவட்டத்தலைமைகளுடன் பேசி நிலைமையை சுமுகமாக்கிக் கொள்ள வேண்டும். இதற்கான சூத்திரதாரிகள் விரைவில் இனங்காணப் படுவார்கள் என்றார். (கு,லோ)

# மருதனார் மடத்தில் பொதுமகன் மீது படையினர் துப்பாக்கிச் சூடு!

## தாக்குதலை நடத்திய சிப்பாய் ஓட்டம்

(நல்லூர்)

யாழ்ப்பாணம் மருதனார்மடம் காங்கேசன்துறை வீதியில் நேற்று சிறிலங்காப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமகன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காலை 10.00 மணியளவில் இந்தத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றதும் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரும் பொலிசாரும் குழுமினார்கள்.

குறிப்பிட்ட சம்பவம் தற்செயலாக இடம்பெற்றதென பொலிசார் தெரிவிக்கின்ற போதிலும் உண்மையில் இராணுவம் திட்டமிட்ட முறையில் இத்துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது. சம்பவம் இடம்பெற்றதும் குறிப்பிட்ட இராணுவச் சிப்பாய் அந்த இடத்தில் இருந்து அகன்று அருகில் உள்ள முகாமினுள் சென்றுவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனைத் தொடர்ந்து அந்த இடத்தில் பெரும் பதற்றமான நிலைமை காணப்பட்டது. (41)

### சர்வதேச...

இதில் மாவட்ட ரீதியாக நடைபெற்ற மனித உரிமைகள் சார்ந்த நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் பற்றி அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

அத்தோடு, வடக்கு-கிழக்கு ரீதியாக நடாத்தப்பட்ட மனித உரிமைகள் சார்நத போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. மேலும் மனித உரிமைகள் சார்ந்த விவாத அரங்கும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### மகிந்தவின்...

யாழ்.குடாநாட்டு மாணவர்களைக் கல்வி ரீதியாகப் பாதிப்படையச் செய்யும் வகையில் அரசும்,அரசபடைகளும் மேற்கொண்டு வரும் பேரினவாத அடக்கு முறைகளுக்கும் ஆக்கிரமிப்புக்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்தக் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

யாழ்.இந்துக்கல்லூரி முன்றலில் இருந்து மரண ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்ட இக்கொடும்பாவி நகரின் பல வீதிகளிலும் இழுத்துச் செல்லப்பட்டு இறுதியில் யாழ். நகரில் உள்ள மத்திய பேருந்து நிலையப் பகுதியில் வைத்து தீமூட்டி எரிக்கப்பட்டது. இராணுவ அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது ஏராளமான மாணவர்கள் இக்கொடும்பாவி எரிப்பு எதிர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டனர். (33,37)

### சூறாவளி...

மாகாணங்களில் முகில் கூட்டங்கள் காணப்படுவதுடன் ஓரளவு பலத்த காற்றுடன் கூடிய மழை அல்லது இடியுடன் கூடிய மழை அவ்வப்போது பெய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

### யாழ்.பல்கலை...

எதிராகத் தொடர்ந்து நடத்திவரும் வகுப்பறைப்பகிஷ்கரிப்பு மற்றும் இராணுவத்திற்கு எதிரான போராட்டங்கள் என்பவற்றிக்கு ஆதரவு தெரிவித்துமே யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இந்த விரிவுரைப் பகிஷ்கரிப்புப் போராட்டங்களை நடத்தினர். இதனால் யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்விச்செயற்பாடுகள் முழுமையாக முடக்கமடைந்தன. (33)

### இராணுவ...

கல்விக்கு இடையூறான இராணுவத்தின் செயற்பாடுகளுக்கு கண்டனம் தெரிவித்திருக்கும் முகமாக யாழ.குடா நாடு தழுவிய ரீதியில் மாணவர்கள் நேற்று இராணுவத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், வகுப்பறைப் பகிஷ்கரிப்புக்கள் என்பனவற்றில் ஈடுபட்டனர்.

இதனால் பாடசாலைகளது செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன. அத்துடன் மாணவர்கள் முக்கிய வீதிகள், சந்திகள் என்பனவற்றில் எல்லாம் வீதித்தடைகளை ஏற்படுத்தியும் ரயர்களைப்போட்டு எரித்தும் இராணுவத்தினருக்கு எதிரான போராட்டங்களை நடத்தியதனால் பெரும்பாலான வீதிப்போக்குவரத்துகள் தடைபட்டன.

மாணவர்கள எதிர்ப்புப்போராட்டங்கள் மற்றும் வீதிமறிப்புக்கள் என்பனவற்றால் இராணுவத்தினர் முகாம்களில் முடங்கவேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஆங்காங்கே இராணுவத்தினர் மாணவர்களின் போராட்டங்களை குழப்பும் வகையில் அவர்களை விரட்டியடிக்க முற்பட்டனர்.

படையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் பிரயோகம், தடியடி, குண்டாந்தடியடி என்பவற்றை மேற்கொண்டு மாணவர்களை விரட்டியடித்ததால் ஆத்திரமடைந்த மாணவர்கள் கற்களால் வீசி இராணுவம் மீது தாக்குதல் நடத்தினர்.

இவற்றால் யாழ். குடாநாட்டில் நேற்றும் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான வீதிகள் நகரங்கள் வெறிச்சோடியே காணப்பட்டன. போக்குவரத்துக்கள் உட்புறவீதிகளூடாகவும் மாற்று வீதிகளூடாகவும் நடைபெற்றன. (33)

### படையினரின்...

சார்பற்ற நிறுவனங்களின் அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. தமிழ் பாடசாலைகளிற்கு மாணவர்கள் எவரும் செல்லாத அதேவேளை சிங்களப் பாடசாலை மாணவர்களின் வருகை குறைந்தே காணப்பட்டது.

திருகோணமலை நகரில் சிங்கள வணிகர்கள் சிலர் நேற்றுக் காலை தமது கடைகளைத் திறந்திருந்த போதும் பின்னர் அவற்றை முடிவிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் முழு அடைப்புப் போராட்டம் கடைப்பிடிக்கப்பட்டதால் மாவட்டத்தின் வழமை நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கு இடையே இன வன்முறைகளைத் தூண்டும் அரசாங்கத்தின் சதிவலையைக் கண்டித்து முழு அடைப்புப் போராட்டத்திற்கான அழைப்பு தமிழ் மக்கள் பேரவை மற்றும்மாணவர் ஒன்றியம் என்ற பேரில் விடுக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைகள் நடைபெறவில்லை. அரச அலுவலகங்கள், தனியார் அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டன. போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டதோடு, சந்தைகள், கடைகள் அனைத்தும் மூடப்பட்டன.

இதேவேளை மட்டக்களப்பு நகரில் முழு அடைப்புக் கடைப்பிடித்த வர்த்தகர்களுக்கு சிறிலங்கா இராணுவத்தினரால் விடுக்கப்பட்ட பகிரங்க எச்சரிக்கை அறிவித்தலையடுத்து நண்பகலுக்குப் பின்பு ஒரு பகுதி வியாபார நிலையங்கள் திறக்கப்பட்டன.

சிறிலங்காப் பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டாக நகரிலும் நகருக்கு வெளியேயும் ஒலிபெருக்கி மூலம் இந்த அறிவித்தலை விடுத்தனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.